𑌶𑍍𑌰𑍀𑌃

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌶𑍍𑌰𑍀𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

ஸம்புடம் 7	ஸர்வதாரி ௵ ஆனி மீ	ஸஞ்சிகை 6

"𑌅𑌹𑍋𑌬𑌿𑌲𑍇 𑌗𑌾𑌰𑍁𑌡𑌶𑍈𑌲𑌮𑌧𑍍𑌯𑍇
𑌕𑍃𑌪𑌾𑌵𑌶𑌾𑌤𑍍 𑌕𑌲𑍍𑌪𑌿𑌤𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑌾𑌨𑌮𑍍 ।
𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍍𑌯𑌾 𑌸𑌮𑌾𑌲𑌿𑌙𑍍𑌗𑌿𑌤𑌵𑌾𑌮𑌭𑌾𑌗𑌂
𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌂 𑌶𑌰𑌣𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑍇 ॥"

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌾 𑌶𑍍𑌰𑍀𑌮𑌨𑍍𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌕𑌰𑍁𑌣𑍋𑌤𑍍𑌥𑌿𑌤𑌾 ।
𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌕𑌟𑌾𑌕𑍍𑌷𑍇𑌣 𑌜𑍀𑌯𑌾𑌦𑌾𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌤𑌾𑌰𑌕𑌮𑍍 ॥
𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌭𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌗𑍇𑌹𑍇 𑌗𑍇𑌹𑍇 𑌸𑌦𑌾 𑌵𑌸𑍇𑌤𑍍 ।
𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌾𑌹𑍍𑌯𑍇𑌷𑌾 𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌯𑌾 𑌸𑌹 ॥

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக்கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, ஸ்ரீந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹா லக்ஷ்மியுடன் நித்யமாய் வஸிக்கக்கடவது.]

::o::

18924
-600 008

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்

[7-ம் அங்கம்]

[சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி]

[ஸ்ரீ. உப. A. V. கோபாலாசார்ய ஸ்வாமி M.A., B.L., அட்வோகேட், திருச்சி.]

ஹுணாத ஜந விசுத விலய ந உ¬ஷூஙஸிதஷொஷூஙஸிதெந—ராமனுடைய ஹஸ்த லாகவத்தில் மாரீசன் விஸ்மிதனுகி, யாவதாயுஷமும் நினைந்து நினைந்து நடுங்கினுன்.

‘ ஸ்ஹவஞ்ஞஹ யொஜநஸுதம் க்ஷிவஸ்தஹாமரஹ ஸம்லூவெ ’

என்று ரிஷி நூறு யோஜனை தூரம் மாரீசனை ஸமுத்ரத்தில் அதிவேகமாய்த் தள்ளித் தள்ளிப் புரட்டியதை வர்ணித்தார். ‘நான் அதி பயங்கரமாய்ப் புகுந்ததும், என்னைக் கண்டு சிறிதேனும் ஸம்ப்ரமப்படாமல், வில்லை அதி லகுவாக நாணேற்றி அஸ்த்ரத்தை என்பேரில் விக்ஷேபம் செய்ததில், நான் ஸமுத்ரத்தில் நூறு யோஜனை தூரம் அடித்தடித்துத் தள்ளப்பட்டு, மிக்க ஆழத்தில் தரைவரையில் என்னைக் கீழும் மேலும் தள்ளி, நினைவும் தவறி மூர்ச்சிதனுகிப் பிறகு வெகுநேரம் கழித்து எனக்கு ப்ரஜ்ஞை வர, என்னைக் கொல்ல இஷ்டப்படாமல் உயிர்ப் பிச்சை தந்ததால் இலங்கை வந்து சேர்ந்தேன்’ என்று ராவணனிடம் மாரீசனே வர்ணித்தான். ‘ ஸஸம்ப்ரமஃ ’, ‘ ஸஜ்யீக்ருத்ய ’, ‘ ஶாஙவஸ்ர ஶரவெமெந ’ என்று மாரீசன் ராமனுடைய ஹஸ்த லாகவமாகிய தோர்வளித்தில் ஈடுபட்டதை ஸூசிக்கிறுர். ‘ உ¬ஷூஙஸிதம் ’ என்பது, செல்லங் கொடுத்து வளர்ப்பதால் ஏற்படும் அடங்காத்தனத்தைச் சொல்லும். ராமனுக்கும் அடங்காமல் அவரையும் மீறி வேகத்தைக் காட்டுவதால் அவருக்கும் விநோதத்தையும் விஸ்மயத்தையும் தருவதை ஸூசிக்கிறுர். ப்ரணதரான ஆச்ரித ஸாதுக்களை ஹிம்ஸிப்பவர்பேரில் அஸ்த்ரங்களுக்கு அத்தனை ஸம்ப்ரமம் உண்டாகிறது; கைக்கும் அத்தனை வேகமும் லாகவமும் ஏற்படுகின்றன. மஹர்ஷிகளுக்குத் தீங்கு செய்பவனென்று மாரீசன் பேரில் கைக்கு அத்தனை வேகம். பொறி கலங்கி மூர்ச்சித்துக் குளிர் நடுக்கலுற்றுத் தண்ணீர் குடித்துக்கொண்டே முழுகுவதும் எழுவதுமாய் ஓயாமல் வேகமாய்த் தள்ளப்படும் மாரீசனைப் பார்த்து, ராமனே ஆச்சர்ய ரஸத்துடன்,

‘ வஸூ லக்ஷ்ண ஶீதெஷும் ஊநவம் யஊஷும் ஹிதழ ।
ஜொஹயிக்ஷா நயதெநம் ந ச ப்ராணைவ்யுஜ்யதெ ॥ ’

என்று பேசினதையும் நினைக்கவேண்டும். ராமனுக்கும் விஸ்மயம்; மாரீசனுக்கும் விஸ்மயம்; விச்வாமித்ரருக்கும் விஸ்மயம். திக்குக்களெல்லாம் அரக்கர் பயம் நீங்கித் தெளிவுற்றதைப் பார்த்துக் கௌசிகர், ‘நான் க்ருதார்த்தனுனேன்; ஸித்தாச்ரமமென்னும் பெயர் இப்பொழுதுதான் ஸத்யமாயிற்று’

என்று மகிழ்ந்தார். ப்ரணதஜந விரோதிகள் விஷயத்தில் இப்படிப்பட்ட கொடிய கைவேகம். தன் விஷயத்திலோ அப்படியில்லை. பத்நயபஹாரியையும்,

'யதி வா ராவண: ஸ்வயம்' 'ஆநயைநம் ஹரிஶ்ரேஷ்ட தத்தமஸ்யாபயம் மயா।'

என்று பரிவுடன் அபயத்தை யளித்தே தீரும் திருக்கை. 'அபய மளித்தாகி விட்டது; விரைந்து ஓடி அழைத்துவா' என்றதால் அதிலும் வேகம்.

'ஜக்மு நரவரஶ்ரேஷ்டா நாநா நகரகோசரௌ'—மிதிலைக்குப் போவதற்குச் சற்றுமுன் மாரீசன், அரும்பு முளைக்காத 12 வயதில்

"அஜாதவ்யஞ்ஜந: ஸ்ரீமாந் பத்மபத்ர நிபேக்ஷண: ।
காகபக்ஷதரோ தந்வீ ஶிகீ கநக மாலயா ॥
ஶோபயந் தண்டகாரண்யம் தீப்தேந ஸ்வேந தேஜஸா ।
அத்ருஶ்யத ததா ராமோ பாலசந்த்ர இவோதித: ॥"

என்று ராமனுடைய இளமை யழகை ராவணனிடம் வர்ணித்தான்.

தாமரை இதழ் போன்ற கண்ணழகிலும், நீலமேனியின் காந்தி பாலை வநத்தையும் பசுமையாக விளங்கச்செய்யும் அழகிலும், ஜிப்பாக் குடுமியின் அழகிலும், பாலசந்த்ரன் உதிப்பதைப்போல் இருந்த திருமுகத்தின் சோபையிலும் அவன் ஈடுபட்டான். பாணத்தின் வேகத்தினல் பயம் ஒரு பக்கமும், திருமேனி யழகில் ப்ரிய வ்யாமோஹம் ஒரு பக்கமுமாய், இரண்டும் கலந்தே எப்பொழுதும் அவன் நெஞ்சைக் கவர்ந்துகொண்டிருந்தது. அப்பால்லா மாய அரக்கன் கண்களையே பாலசந்த்ரன் உதித்ததுபோல அநுபவிக்கச்செய்த அழகு, அதன் சில திநங்களுக்குப் பிறகு மிதிலாபுரியிலுள்ள கண்ணழகிகளான யுவதிகள் கண்களை, 'சந்த்ரனைச் சகோர பக்ஷிகள் பருகுவதுபோலப் பருகி மகிழச் செய்யாம லிருக்குமோ?' என்ற ஸங்கதி ரஸத்தைக் காட்டவே இங்கே மாரீச வ்ருத்தாந்த ஸூசநம் செய்த முன் விஶேஷணத்தை அடுத்து மிதிலா ப்ரவேஶ வ்ருத்தாந்தத்தைப் படிக்கிறார். கத்யத்தின் நடுவில், ஓர் நீண்ட விஶேஷணத்தால் அஹல்யா வ்ருத்தாந்தம் பேசப்பட்டுள்ளது. மைதில நகரத்திலுள்ள ஸுலோசநைகள் ராமனைத் தங்கள் ஸீதையின் மணாளன் என்று மாப்பிள்ளையாகப் பாரித்தார்கள். 'ஊதமக்ஷி யயைவ ஜக்முர்ஜந:' என்று ஸ்ரீகுணரத்நகோஶ ச்லோகத்தை நினைப்பூட்டுவதற்காக 'ஜக்மு நரவர—ஶ்ரேஷ்டா' என்று படித்தது. ராமன் தர்மமே வடிவெடுத்தவர். பெண்களுக்கு அவரழகில் காம மென்னும் விகார முண்டாவதில்லை. ராமன் பும்ஸாமேவ த்ருஷ்டி சித்தாபஹாரீ. சூர்ப்பணகை ஒருத்தியே ராமனிடம் காமங் கொண்டாள். சகோர பக்ஷிகள் சந்த்ரனிடம் காமத்தினல் சந்த்ரிகையைப் பருகுவதில்லை. அதன் இனிப்பாலேயே அதைப் பருகித் தங்கள் தாஹத்தைத் தீர்த்துக்கொள்கின்றன. காம மல்லாத இனிப்பு என்பதைச் சகோர ரூபணத்தால் ஸூசிக்கிறார். அயோத்யாகாண்ட ஆரம்பத்தில் 3-வது ஸர்க்கத்தில், உப்பரிகையில் மஹாஸபை நடுவே வீற்றிருந்த சக்ரவர்த்தி திருவீதியில் ரதத்தில்

வரும் ராமனை, 'चन्द्रकान्ताननं राममतीव प्रियदर्शनम्' என்று அநுபவித்தார். "पूर्णचन्द्राननस्य रामस्य" என்றும் ரிஷி வர்ணித்தார். தண்டகாரண்யத்தில் கடும் வெயிலில் ராமன் ப்ரவேசிக்கையில், சந்த்ரோதயம்போல மஹர்ஷிகளுக்கு ஸேவை ஸாதித்ததாக ஆரண்யகாண்டம் முதல் ஸர்க்கத்திலேயே ரிஷி வர்ணித்தார். 'காகவக்ஷயா:' என்று மாரீசன் ராமனிடம் ஈடுபட்டதைக் காளிதாஸர் 'காகவக்ஷாசைத்யயாசித:' என்று தம் ஈடுபாட்டைக் காட்டினார். ஜநகரும் 'காகவக்ஷயரேண வீரேண' என்று அவ்வழகில் ஈடுபட்டார். 'வஷ்வத்ருவிஶாலாக்ஷ' என்று ராமனுடைய கண்களை ஜநகர் வர்ணித்தார்.

திநகரகுலகமலதிவாகரேண—'திநகர னென்னும் ஸூர்யன் தன் கிரணங்களால் பகலை யுண்டாக்கி உலகத்தையே ப்ரகாஶிக்கச் செய்பவன்; அவனுடைய குல மென்னும் தாமரையை மலரச்செய்யும் ராமன்' என்கிறார். ராமன் ஸூர்யனையும் விகஸிக்கும்படி—சோபிக்கும்படி—செய்யும் ஸூர்யன். 'ஸூர்யஸ்யாபி பவேத் ஸூர்ய:' என்று ஸுமித்ரை, ராமன் ஸூர்யனுக்கும் ஒளி தந்து ப்ரகாசப்படுத்தும் புருஷோத்தமன் என்ற உண்மையை ஸூசித்தாள். 'யஸ்ய பாஸா ஸர்வமிதம் விபாதி' [எந்த ப்ரஹ்மத்தினுடைய ஒளியை உபயோகப்படுத்திக்கொண்டு ஆதித்யன் ப்ரகாஶிக்கிறானோ] என்பது உபநிஷத்து ஓதிய தத்வம்.

"यदादित्यगतं तेजो जगद्भासयतेऽखिलम्।
यच्चन्द्रमसि यच्चाग्नौ तत्तेजो विद्धि मामकम्॥"

என்று கீதை கூறிற்று. ராமசந்த்ரனையினும் ஸூர்ய குலத்தி லுதித்து ஸூர்யனுக்கும் ஶோபை தரும் ஸூர்யன்.

கண்டபரஶுகோதண்டகாண்டகண்டநபாண்டிதேந—துண்டம் துண்டமாகக் கண்டிப்பது கண்டம். கண்ட: பரஶு: யஸ்ய ஸ:— துண்டிக்கும் கோடரியை யுடையவர் ஈச்வரர். பரசுராமருக்கும் இப்பெயர் உண்டு. 'வாள் கொணீண் மழுவாளி' என்பது நம்மாழ்வார் வர்ணநம். அடுத்த விஶேஷணத்தில் அவர் ப்ரஸ்தாவத்திற்கு இது அவதாரிகையு மாகும். 'துண்டிக்கும் பரசுவையுடைய ருத்ரரின் கோதண்ட மென்னும் வில் துண்டிக்கப்பட்டது' என்று ரஸம். 'கோதண்டம்' என்பதற்கு 'சப்திக்கும் (டங்காரம்செய்யும்) தண்டத்தை யுடைய வில்' என்பது பொருள். 'கு' என்பது சப்திப்பதைச் சொல்லும். அந்த வில் தன் டங்கார ஓசையாலேயே பகைவருக்கு நடுக்க முண்டாக்கும். இந்தக் கோதண்டம் (சிவ தநுஸ்) ஒடிந்த ஒலி, பேரிடி முழக்கம்போல் விச்வாமித்ரர் ஜநகர் ராகவர்கள் தவிர மற்றவர்களைக் கீழே தள்ளிவிட்டது. ஒடிந்த ஶப்தம் பேரிடி முழக்கம்போல் இருந்ததால், இதைக் கோதண்ட மென்னலும் தகுதியே என்ற ரஸவ்யஞ்ஜநம் கவனிக்கத்தக்கது. 'கோதண்டகாண்ட'— ச்ரேஷ்டமான கோதண்டம். 'தஸ்ய தத்ர்ஷாம் ஶ்ரேஷ்டதமம் கோதிவர்ஷம்' என்ற ஜநகர் வார்த்தையை இதனால் ஸூசிக்கிறார். வில்லை லீலையாக நடுவில் பிடித்து விளையாட்டாக நிமிர்த்து வளைத்து இழுக்கையில், வில் நடுவில் முறிந்து

விட்டது. இதையெல்லாம் ஸீதை அரண்மனையிலிருந்து பார்த்துக்கொண்டிருந்தவள். அவள் அநஸூயையிடம் (அயோத்யாகாண்ட முடிவில்) இதை வர்ணிக்கிருள். பாலகாண்டம் முடிவிலும் அயோத்யாகாண்ட முடிவிலும் இந்தக் கதை இருதடவை படிக்கப்பட்டது. 'தேந வரயதா வேஹாநஜ்யே ஹநம்' [ராமனுடைய கைவேகத்தால் வளைத்து இழுக்கப்பட்ட வில் இரண்டு துண்டாக்கப்பட்டது.] என்று ஸீதை சொல்லுகிருள். இராமன் ஒடிக்க எண்ணுவிடினும், அவர் கைவேகம் அதை ஒடியச்செய்தது. 'ஊமுஜபித்ஷெர்மு ஜபித' என்பதற்கு இதுவும் ஓர் சான்ருகும். 'கோதண்டத்தைப் புஜதண்ட வேகம் ஒடித்துவிட்டது. கோதண்ட பலத்தைப் புஜதண்ட வேகம் கண்டித்தது; வென்றது' என்ற இதனல் ஸீதையின் வர்ணநம் ஸூசிக்கப்படுகிறது.

ஹுரஹவதிவஹதிவிஹதிகூர நதவரஷிஷவரிவெண— மாரீசனுடைய ச்லாகதையை ஸூசிப்பதால் ராவணனை நிரஸிக்கத்தக்க மஹாவீரன் ராமன் என்பதைக் காட்டினர். தசவதநனுகிய ராவணனை அடக்கிப் பிடித்துச் சிறையிட தசசதபுஜ ந்ருபதியான கார்த்தவீர்யார்ஜுநனை ஸம்ஹரித்த பார்க்கவ ரென்னும் கண்டபரசுவை சமநம் செய்த வ்ருத்தாந்தத்தோடு பாலகாண்டம் முடிவுறுகிறது. இதனல் கைமுத்ய ந்யாயத்தால் ராவணனை ஜயிப்பது எம்மாத்ரம் என்பது த்வநியினல் தெளிவாயிற்று. இதைக்காட்ட 'கு தஹர ஶிவரி' என்று ஒரு பெரிய விசேஷணத்தால் ப்ருகுபதியை கத்யத்தில் வர்ணித்தார். 6-வது அங்கத்தில் கேரள நாட்டை வர்ணிக்கையில் அவரை வர்ணித்த தசாவதார ச்லோகம் படிக்கப்பட்டது. 'ப்ருகுபதி' என்பதற்குள்ள நீண்ட விசேஷணத்தை இங்கே படிக்கவில்லை. அர்ஜுநனை நிரஸித்த கதையை ராமனிடம் பரசுராமன் சொன்னர். பார்க்கவருடைய சராஸநத்தையும் (வில்லையும்) பாணத்தையும் லகுவாகக் கைபிலெடுத்தார். 'லகுபராக்ரம:' என்று கைலாகவத்தை ரிஷி வர்ணித்தார். அவருடைய ஸ்வர்க்க ப்ராபக புண்யங்களான ஸுகதியைப் பயனற்றதாகச் செய்து ஸ்வர்க்கப்ராப்தியைத் தடுத்தார். புண்யமென்பதைப் 'பொன் விலங்கு' 'கநக ச்ருங்கலம்' என்பர். அதையும் அறுக்காவிடில் மோக்ஷத்திற்குச் செல்ல இயலாது. ஸ்வர்க்க கதியாகிய ஸுகதியும் மோக்ஷ விரோதியே.

'ஸாஹஜவஷூவஸுகூரதொவி வொரஹவகு ஸஹஜொஹஜவரிவொஷர தூயः'

என்ற காளிதாஸர் ச்லோகம் இங்கே ஸ்வாமி திருவுள்ளத்தில் உள்ளது. 'வரிவ' என்பது த்வாரக் கதவை மூடி அடைக்கும் நீண்ட தாழ்ப்பாள். புண்யமென்பது இந்த்ர லோகமாகிய ஸ்வர்க்கத்தில் சிரகாலம் அநுபவத்தைத் தருவதால் மோக்ஷக் கதவை யடைக்கும் தாழ்ப்பாளாகும். அப்புண்யத்தை யழிப்பதால் ஸ்வர்க்க கதிப் புண்ய லோகத்திற்குச் செல்லும் கதவை யடைத்து, மோக்ஷத்திற்குச் செல்வது எளிதாகும். விஷ்ணுவே விஷ்ணுவில்லை நாணேற்றிச் சரம் தொடுத்தார். 'ப்ரஹ்ம குலத்தாலும், விச்வாமித்ர ஸம்பந்தத்தாலும் உம்மைக் கொல்லத்தகாது. உம்முடைய கால்நடை யென்னும் பாதகதியை இந்த

அம்பு அழிப்பதா? அல்லது நீர் உம்முடைய தவத்தால் ஸம்பாதித்திருக்கும் புண்ய லோகங்க ளென்னும் ஸ்வர்கதியை அழிப்பதா? உம் இஷ்டத்தைச் சொல்லும்’ என்று ராமன் கேட்டதற்கு, ‘பழம் நழுவிப் பாலில் விழுந்தது; உடனே என் ஸுக்ருத அத்ருஷ்டங்களை யெல்லாம் அழிக்கவேண்டும்’ என்று பார்க்கவர் ப்ரார்த்தித்ததும், அப்படியே அவருடைய புண்யாத்ருஷ்டங்களை யெல்லாம் ஶரத்தால் ஸம்ஹரித்தார். ‘அத்ருஷ்டம்’ என்பதை லக்ஷ்யமாக்கி அதை அழிக்க விஷ்ணு தநுஸ்ஸிலிருந்து விஷ்ணுவே எய்யும் ஶரம்தான் வலிமையுடையது. இதனால் புண்ய பாபங்களைத் தொலைத்து முக்தி தரும் பரமாத்மாவே ராமன் என்பது விளக்கப்பட்டது. பரசுராமன் வளைக்கக் கொடுத்தது விஷ்ணு தநுஸ். அதை வளைத்துச் சரம் தொடுத்தவரும் ராமனாகிய விஷ்ணு. ‘பரசுராமர் தசரத ராமரை ப்ரதக்ஷிணம் செய்து முக்திப் பேற்றுக்கு யோக்யராகி ஆத்மகதியைக் குறித்துச் சென்றார்’ என்று ரிஷி இதை வ்ருத்தாந்த முடிவில் கூறினார். ‘ஸ்வர்கதி’ என்னும் ஸ்வர்க்க கதியைத் தடுத்து ‘ஆத்மகதி’ யென்னும் மோக்ஷ கதிக்கு யோக்யராகச் செய்தது இந்த ஶரம். ஸ்வர்கதியை விஹதி (தடை) செய்த வளைத்த விஷ்ணு வில்லிலிருந்து எய்த கனுவையுடைய பாணம் என்னும் ஸ்வர்க்க த்வார மடைக்கும் தாழ்ப்பாளை யுடையவனாலே’ என்பது பொருள். ஜயிக்கப்பட்ட எதிரியின் புண்ய விலங்குகளை நீக்கினாரென்று தயாஶதகத்தில் ‘[illegible]’ என்று வர்ணிக்கப்பட்டது. ராமனுடைய அம்பின் கருணை அத்தகையது. ‘த்வயா த்ரைலோக்யநாதேந’ என்று பரசுராமர் ‘த்ரைலோக்ய நாதன்’ எனக் கூறியதை அடுத்த அயோத்யாகாண்ட ஆரம்பத்தில் ‘த்ரைலோக்யஸ்வி நாதேந’ என்று ரிஷி பாடினார். பரசுராமர் புகழ்ச்சிப் பதத்தையே பாடினார். ‘க்ருத’ என்பது வில்லை வளைத்து நாணேற்றிய கைக்கும் பொருந்தும். பரசுராமர் ராமனுடைய ஹஸ்தலாகவத்தைக் கண்டு ‘நீர் புருஷோத்தமனே’ என்று தீர்மானித்துக் கூறினார். இதுவும் தோர் வலிதத்தைக் காட்டும். இங்கே பாலகாண்டம் முடிவுபெறுகிறது.

[தொடரும்]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

மதுராலயம்

[ஸ்ரீ. உப. S. T. ஸ்ரீநிவாஸாசாரியர், M. A., வித்வான், L. T., திருவையாறு]

'தீரா வழக்குத் திருக்கண்ணன்குடி' என்று கேள்விப்பட்டிருப்பீர்கள். திவ்ய தேசங்கள் எல்லாவற்றிலுமே ஓர் தீராத வழக்குண்டு. அதாவது: அங்கே வந்து கோயில்கொண்டு, குறைவொன்றுமில்லாத கோவிந்தன் சேதநனை 'நீ என்னுடையவன்; உன்னைப் பிடித்துக் காக்கவே இங்கு வந்துள்ளேன்' என, நன்றியற்ற மனிதன் 'நான் உன்னுடையவனல்லன்' எனத் தன் மார்பு நெளித்து அப்பால் அகல்கிறானே; இந்த ஸ்வாமித்வ, ஸம்பந்த என்கிற வழக்கல்ல இங்கு. விசேஷமாகத் திருமங்கைமன்னன் திருவரங்கத்து மதில்களைக் கட்டுவதற்காக ஒரு பொன் ப்ரதிமையை நாகையிலிருந்து கிளப்பி வந்ததாகவும், வழியில் திருக்கண்ணன்குடியில் விச்ரமிக்குங்கால், அதை ஒரு வயலில் புதைத்து வைத்திருந்ததாகவும், வயலுக்கு உடையான் உழ வரும்பொழுது அவனுடன் 'இது என் வயல்; உனதல்ல; வேண்டுமாகில் நாளை ந்யாய ஸ்தலத்தில் ப்ரமாணங்களை ருஜுப்படுத்துகிறேன்' என்று திருமங்கையாழ்வார் சொல்லி அவனைத் தாத்காலிகமாய் விலக்கிப் பொழுது விடிவதற்குள் பொன் விக்ரஹத்துடன் கிளம்பிவிட்டதாகவும்; அந்த வழக்குக்கு இன்னும் அவர் ஆஜராகவில்லையாகையால், அது தீரா வழக்காயிற்று என்றும் ஒரு வ்ருத்தாந்தமுண்டு. அந்தத் திருக்கண்ணன்குடியைப்பற்றியே சிறிது பேச விரும்புகிறேன்.

தஞ்சை—நாகப்பட்டினம் இருப்புப் பாதையில் கீவளூர் ஸ்டேஷனில் இறங்கினால் நேர்மேற்கே ஒரு வழி செல்கிறது. முக்கால் க்ரோச தூரம் அவ்வழி செல்கிறது. பரந்த வயல்வெளி. மேலே விசாலமான ஆகாயப் பரப்பு. பக்ஷி ஜாலங்கள் நூற்றுக்கணக்காகப் பறந்து திரிகின்றன. இந்த இனிய இயற்கைக் காட்சியை அநுபவித்துக் கொண்டு சென்றால் ஊர் நெருங்குகின்றது. ஊரென்றால் சிறிய அழகான ஊர். 'வெம்மையால் விடாய்த்தவர்கள் இங்கு வாருங்கள்' என்பதுபோல் கூப்பிடும் ஓர் அழகிய விசால தடாகம்.

'ரமணீயம் ப்ரஸந்நாம்பு ஸந்மநுஷ்யமநோ யதா'

என்று சொல்லப்படும் இனிமை வாய்ந்த இத்திவ்ய ஸரஸ், ஸர்வேச்வரனது ஆலயத்தின் பின்புறம் இருக்கிறது. பின் புறத்திருந்து நோக்கினால் திவ்ய விமானங்கள் கண்ணுக்கு ஆநந்தத்தைத் தரும். ஸ்தல வ்ருக்ஷமான ஒரு ப்ரம்மாண்ட மகிழமரம் இனிது பரந்து ஸர்வேச்வரனுக்கும் பெரிய பிராட்டியாருக்கும் தண்ணிழலைத் தந்துகொண்டிருக்கிறது. வலம் வந்து திருக்கோயில் முன்னின்றால் அத்புதமான சிறிய கோபுரம். கடந்து உள்ளே சென்றால் விசாலமான அணி முற்றம். திருமங்கையாழ்வார் திருநாகையை மங்களாசாஸநம் செய்துவந்து களைத்து இளைப்பாறியதாக அம்மகிழ மரத்தடியைக்

காட்டுகிறார்கள். இன்னும் தாண்டி உள்ளே கருட மண்டபம் சென்றால், செல்லுங்காலே இனிய தென்றலின் வாடை நம் உடல் வெம்மையை நீக்கும். கருட மண்டபம் கடந்து மஹா மண்டபமும் திருஉள்நாழியையுந் தாண்டிச் சென்றால், 'கண்டோம் கண்டோம் கண்டோம் கண்ணுக்கினியன கண்டோம்' என்று கண்ணழகன் குழலழகன் கொப்பூழிதழகன் ஸேவை ஸாதிக்கிறான்.

உயர்ந்து நிமிர்ந்த ஆக்ருதி. செயற்கை அழகில்லாமல் இயற்கை யழகே ததும்பும் திருமேனி. பரந்த ஒளி வாய்ந்த முகம். கள்ளப் பார்வையும் வெள்ளக் கருணையும் கொண்ட திருக்கண்கள். எது வரினும் எது போயினும் என் நிலை மாறாது என்பான் போன்ற ஒரு தோற்றம். திருப்பவளங்களில் தாண்டவமாடும் ஒரு குறுநகை. நிமிர்ந்த திருமார்பைக் கண்டால் 'பெற்றக்கால் இவனாகம் பெண்பிறந்தார் உய்யோமோ என்கின்றாளால்' என்ற வரிகளை நினைப்பூட்டும். பயந்து நடுங்கி வந்த மார்க்கண்டேயனுக்கு அஞ்சேலென்று எடுத்த அபயமுத்ரை என்கிறார்கள். நடுங்கிவந்த தர்மதேவதைக்கு நல்வர வளித்து மகிழ்வித்த திருநோக்கு என்கிறார்கள். அம்பரீஷன், ப்ருகு, மார்க்கண்டன், தர்மதேவதை, ஸப்த கந்நிகைகள் திருவடியை ஆச்ரயித்து நிற்பதாகச் சொல்லுகிறார்கள். புராணம்! ஆனால் அப்பனின் வடிவில் வீரமும், கருணையும், த்யாகமும், வெற்றியும் ஜ்வலிக்கின்றன. இவன் கொண்ட நாமம் என்ன தெரியுமா? தாமோதர நாராயணனாம். சேதநா சேதந ஸமஸ்த வஸ்துக்களிடத்தில் தன் கருணையும் எளிமையும் தோற்றுமாறு, தாமோதர னென்றும், ப்ரம்ஹாதி ஸ்தாவர பர்யந்தம் தானே இறைவன் என்பதைக் காட்ட நாராயணன் என்றும் பெயர் போலும். திருமங்கை மன்னனே இவனது திவ்யவடிவில் ஈடுபட்டுக் கையும் சங்குமாயிருந்த நிலைக்குத் தன் நெஞ்சைப் பறிகொடுத்து, அவன் உந்திமேல் நான்முகனைப் படைத்த அருட்செயலுக்கு ஆற்றாதவராகிச் 'சங்கமா ரங்கைத் தடமல ருந்திச் சாமமா மேனியென் தலைவன்' என்றார். பரகால நாயகி வாய்ப்பட்டதே வாய்த்த பெயராகிவிடு மல்லவா? அவ்வெம்பிரானுக்குச் 'சாமமாமேனி' யென்றே பெயர் ஆயிற்று.

தற்கால உலகச் சீரும் செல்வமும் இல்லாத ஓர் இடத்தில் இப்படிப் பட்ட அத்புதமான அழகுத் தெய்வம் கூத்தாடுவது ஒரு வியப்பே. ஆனால் இந்த ஊர் இப்படியே இருந்திருக்க முடியாது. மாலை வேளையில் கோபுர வாயிலில் நின்று நோக்கினால், கண் கொண்ட மட்டும் பரந்த வயற்பரப்பு. ஆயினும் சிறிதாகத் தென்படும் ஸந்நிதி வீதியின் அமைப்பைப் பாருங்கள். அதன் அகலத்தை நோக்குங்கள். வயற்புறங்களில் சில ஸமயங்களில் கற்சுவர்கள் காணப்படுகின்றன என்று ஊரார் சொல்லும் வார்த்தையை ஓர்த்து நோக்குங்கள். ஸமாதானமாகும். ஸ்ரீ பரகாலனது காலத்தில் இது மாபெரும் பட்டணமாகவே இருக்கவேண்டும். மயர்வற மதிநல மருளப்பெற்ற ஆழ்வார்—கனவிலும் பொய் என்பதை அறியாத ஆழ்வார்—என்ன சொல்கிறார் கேளுங்கள்.

"இத்திவ்ய நகரில் எரி ஓம்பி எழில் வாய்ந்த எண்ணிறந்த அடியவர் வாழ்கின்றனர். இந்நகரின் மதிள் ஆச்சர்யமானது. இந்நகர மாடங்களின்

முகட்டில் மதியம் சென்று சேரும். வயல்தோறும் நெய்தல் நிலத்தினின்றும் அலையா லடிக்கப்பட்டு வரும் வயிரமும் மரகதமும் முத்தும் குப்பை குப்பை யாய்க் குவியும். இப்படிப்பட்ட நீர்வள நிலவளப் பொருள் வளமுடையது இப்பட்டினம்.'' இந்நிலையை இன்று யாம் இந்த ஊனக் கண்களாற் காண் பதற் கில்லை. குப்பை உயர்வதும் கோபுரம் தாழ்வதும் ஸஹஜ மல்லவா ?

ஆனல் இன்றுங் காணத்தக்க கலியன் வருணனைகள் உண்டு. அவற்றை இன்றைக்கும் கண்டு பெருமகிழ்ச்சி கொள்ளலாம். எங்குப் அழகிய சோலை கள். தண்ணென்ற நீர்நிலைகள். குவளை தாமரை செங்கழுநீர் சம்பகம் இம்மலர் களின் நறுமண மலிவு. புன்னை மரங்களின் பொலிவு. மல்லிகைச் செடிகள் மலர்ந்து காண்கின்றன. பலாமரங்கள் பருத்த பழங்களால் வணங்கித் தேன் வெள்ள மிடுகின்றன. உயர்ந்த தாழைப் புதர்களில் மலர்கள் பூத்துப் பூத்துக் காண்கின்றன. மாலைதோறும் நீலவானம் கறுத்து மேகப்படலம் நிறைந்து இடியோசை அதிர்கிறது. கோபுரமும், வீதியும், வீதி முனையில் திருத்தேர் நிலைய மும், வயலும், வாவிகளும், மண்டபங்களும், தொலைவிலிருந்து காணும் வழிப் போக்கர் உள்ளத்துக்குக் கொள்ள மாளா இன்பத்தைப் பயக்கின்றன.

மனிதன் அறிவினல் பெரியன் என்று இறுமாந்திருக்கிறன். 'வானத்தை வெல்வேன். கடலைக் கடப்பேன். மலையைப் பிளப்பேன். மண்ணைப் பொன் ஆக்குவேன். கடலை நிலம் செய்வேன். நிலத்தைக் கடலாக்குவேன். எனக்கு ஆர் நிகர் ? கடவுள் இல்லை. சாஸ்த்ர மில்லை' என்கிறன். திருக்கண் ணன்குடித் தேவனே வெகு பொறுமையுடன், அருள் வெள்ளமிடும் தன் திருக் கண்களைச் சுழற்றி, உலகை உய்விக்கும் தன் திருமுகப் பாசுரத்தால், 'அறி விலி! நான் என்று முளேன்; இன்று முளேன்' என்று சொல்வான்போல் புன் சிரிப்புச் சிரித்து நிற்கிறன். அவன் சொல்வதை ஆமோதிப்பதுபோல் வானம் யந்தமாக இடிக்கிறது. தென்றல் திசைதோறும் வந்துலவி அவனுக்கு ஆட் செய்கிறது. சேதநாசேதந ஸமஸ்த தாஸ்யத்தை உணர்த்துவது போல் மாலுங் கருங்கடல் மணியையும் முத்தையும் அவனுக்குத் தன் திரைக் கரங்க ளால் அளிக்கிறது. பரகாலன் கண்ட கண்களால் நோக்கு. அவன் நெஞ்சினல் நோக்கிக் காண. இத்திருக்கண்ணன் குடியை அடைந்த நம் பாக்யமே பாக் யம். நமக்கு ஆர் நிகர் ? எத்தனையோ கால மாயிற்று அவன் வந்து. இன்னும் எத்தனையோ காலம் காத்திருக்கப்போகிறன். யாத்ரிகனே! உன் அடியைத் திருக்கண்ணன்குடிப் பக்கம் திருப்பு. ஸ்ரீ அரவிந்தவல்லியார் கேள்வனிடம் உன் மனத்தை அனுப்பு. இன்ப வெள்ளம் பொங்கி வழியும் அந்த வற்ரு வரு ஆற்றைத் தாஹத்தால் வாடிய நீ பருகிப் பார். அந்த ஆராவமுதத்தைப் பருகிக் களித்துப் பார். 'உள் கலந்தார்க்கு ஆற்ற இனியன்' என்று சொல்கிறர்கள். நம்பு; செல்; வழுபடு; துதி; வணங்கு; உன்மாய வல்வினைகளைக் களை. ஏன் ? பரகாலன் என்ன சொல்லுகிறர் கேட்டாயா ?

1. "வங்கமா முந்நீர் வரிநிறப் பெரிய வாளர வினணை மேவி
சங்கமா ரங்கைத் தடமல ருந்திச் சாமமா மேனியென் தலைவன்

அங்கமா றைந்து வேள்விநால் வேதம் அருங்கலை பயின்றெரி மூன்றும்
செங்கையால் வளர்க்கும் துளக்கமில் மனத்தோர் திருக்கண்ணன் குடியுள்
நின்றானே ".

10. " கலையுலா வல்குல் காரிகை திறத்துக் கடல்பெரும் படையொடும் சென்று
சிலையினா லிலங்கை தீயெழச் செற்ற திருக்கண்ணன் குடியுள் நின்றானை
மலைகுலா மாட மங்கையர் தலைவன் மானவேற் கலியன்வா யொலிகள்
உலவுசொல் மாலை ஒன்பதோ டொன்றும் வல்லவர்க் கில்லை நல்குரவே."

[பெரியதிருமொழி, 9-ம் பத்து, முதல் திருமொழி]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

திருப்பாவை

[ஸ்ரீ. உ.வே. தி. ஈ. சடகோபாசார்ய ஸ்வாமி, B.A., B.L., அட்வோகேட், திருப்பாப்புலியூர்.]

[4-வது ஸம்புடம், 5-வது ஸஞ்சிகை, 43-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

முன் பாசுரத்தில் 'உம்பர்கோமானே உறங்கா தெழுந்திராய்' என்று தங்களுக்குப் பரமோத்தேச்யமான பகவத் ப்ரபோதநத்தை ஸங்க்ரஹேண ஸூசிப்பித்து, பிறகு அதை ஸாங்கமாகப் ப்ரபஞ்சநம் பண்ணத் தொடங்கி, முதலில் 'வாஸவம் ப்ராப்யஸ்ரிதா ப்ரபத்யேத ப்ராப்யஸம் ஸ்ரியம்' என்கிற கணக்கில் இப்பாசுரத்தில் புருஷகார ப்ரார்த்தனையைச் செய்கிறார்கள்.

18. உந்து மதகளிற்ற னோடாத தோள்வலியன்
நந்த கோபாலன் மருமகளே நப்பின்னாய்
கந்தங் கமழும் குழலீ கடைதிறவாய்
வந்தெங்கும் கோழி யழைத்தனகாண் மாதவிப்
பந்தல்மேல் பல்கால் குயிலினங்கள் கூவினகாண்
பந்தார் விரலியுன் மைத்துனன் பேர்பாடச்
செந்தா மரைக்கையால் சீரார் வளையொலிப்ப
வந்து திறவாய் மகிழ்ந்தேலோ ரெம்பாவாய்.

[பதவுரை]—உந்து-பெருகுகின்ற, மத-மத ஜலத்தையுடைய, களிற்றன்-யானையினிட மிருந்து, ஓடாத-பயந்து ஓடாத, தோள் வலியன் புஜ பலத்தையுடைய, [பீமன் போல் தனது புஜபலத்தால் மதயானைகளை அடக்கவல்லவன் இவன் என்றபடி], நந்தகோபாலன் - நந்தகோபருடைய, மருமகளே நப்பின்னாய்- மருமகளாகிய நப்பின்னையே! [நப்பின்னை, யசோதைப் பிராட்டியின் ஸோதரரான ஸ்ரீ கும்பர் என்பவருடைய குமாரி யாகையாலும், க்ருஷ்ணனுக்கு ப்ரியதமை யானபடியாலும், இருவிதத்திலும் நந்தகோபருக்கு மருமகளாகிறாள்; பின்னை என்பது லக்ஷ்மீவாசக சப்த மாகையாலும், அதற்கு முன் 'நல்' என்கிற சப்தத்தால் குறிக்கப்பட்ட விசேஷணம் ச்ரேஷ்ட வாசக

மாகையாலும், விசேஷணமும் விசேஷ்யமும் சேர்ந்த ஸமஸ்த பதத்தால் பகவானுடைய ப்ரேமாதிசயத்துக்குப் பாத்ர பூதையான ப்ரியதமை அவள் என்பது ஏற்படுகிறது.] கந்தம் கமழும்—பரிமளம் வீசுகின்ற, குழலீ- கூந்தலை யுடையவளே ! [முன்பு 'வாச நறுங்குழ லாய்ச்சியர்' என்ற விடத்தில் பதப்ரயோக ஸாமர்த்யத்தால், தயிர் கடையும்போது ஏற்பட்ட சலநத்தைப் பேசும் ஸந்தர்ப்பத்தைக் கொண்டும், புஷ்பம் முதலிய வாஸநா த்ரவ்யங்களின் சேர்க்கையால் ஆய்ச்சியர்களின் கூந்தலுக் குண்டான பரிமளம் வர்ணிக்கப்பட்டது. இங்கு அப்படியில்லாமல், அசைவில்லாத சயந தசை வர்ணிக்கப்படுவதாலும், 'கமழும்' என்கிற சப்த ஸ்வாரஸ்யத்தாலும், 'குழலீ' என்கிற பதத்திலுள்ள நித்யயோகார்த்தகமான 'மதுப்' ப்ரத்யயத்தாலும், நப்பின்னைப் பிராட்டியின் கூந்தலுக்குள்ள ஸ்வாபாவிக ஸௌரபம் பேசப்பட்டதென்று விவேசநம் உபபந்நமாகும். அடுத்த பாசுரத்தில், 'கொத்தலர் பூங்குழல் நப்பின்னை' என்பதற்குப் பௌநருக்த்யம் வாராததற்காகவும் இவ்வர்த்தம் கொள்வது உசிதமாகும். அல்லது: இப்பிராட்டி ஸ்வபாவத்தால் புஷ்ப ப்ரியை யாகையால், எப்போதும் தன் கூந்தலில் புஷ்பங்களை அணிந்துகொண்டிருப்பதுபற்றி அவளது திருக்குழல் ஸர்வதா வாஸித்துக்கொண்டிருந்த தென்பது தாத்பர்யம். இதையே அடுத்த பாசுரத்தில் 'கொத்தலர் பூங்குழல் நப்பின்னை' என்று விசதீகரிக்கிருள் போலும்.] கடை திறவாய்—வாயிலைத் திறப்பாயாக; கோழி எங்கும் வந்து அழைத்தன காண்- கோழிகள் எல்லா விடங்களிலும் ஸஞ்சரித்து ஒன்றுக்கொன்று அழைப்பனபோல் கூவுகின்றன பார். [இத்தால் நன்றாகப் பொழுது விடிந்தது குறிக்கப்படுகிறது. கோழிகள் இருந்த விடத்தி லிருந்தே காலத்தைக் குறிக்கமட்டில் கூவுவதில்லாமல், எங்கும் ஸஞ்சரித்துப் பரஸ்பரம் ஆஹ்வாநம் பண்ணுவதால் பொழுது நன்றாக விடிந்த தென்பது ஏற்படுகிறது. இதை நீ தெரிந்துகொள்ளவேண்டாமா என்பது கருத்து. 'அழைத்தன' என்பதால், அவைகள் ஒன்றுக்கொன்று அழைப்பது தவிர, தூங்கும் மனிதர்களையும் 'எழுந்து வெளியில் வாருங்கள் ; பொழுது விடிந்துவிட்டது' என்று கூப்பிடுவதுபோல் இருக்கிறது என்பது தாத்பர்யம்.] மாதவி பந்தல்மேல்—குருக்கத்திப் பந்தலின்மேலே, குயில் இனங்கள்-கோகில பக்ஷிகள், பல்கால் கூவின, காண்—(கூட்டமாக உட்கார்ந்து) பலமுறை கூவுகின்றதை நீ செவியுறவில்லையா? பந்து ஆர் விரலீ-பந்து விளையாட்டுக்குப் பொருந்திய அழகு வாய்ந்த கைவிரல்களை உடையவளே ! [இத்தால் விரல்களின் ஆகார ஸௌஷ்டவமும் ஸம்ஹவத்வமும் ஸூசிதம். பந்தை ப்ரஸ்தாவித்ததால், 'பொழுது விடிந்துவிட்டது ; இனி போக தசையை நீக்கி லீலா தசையைக் கைக்கொள்ள ப்ராப்தம் என்பது த்யோதிதம். சிறு வயதில் ஆஹாரம் நித்ரை இவைகளைவிட விஹாரத்தில் அதிக அபிலாஷம் இருப்பது இயல்பாகையால், சிறுமிகளுக்கு மிகவும் ப்ரியமான பந்து விளையாட்டை நினைத்தாவது எழுந்துவரட்டுமென்று தாத்பர்யம்.] உன் மைத்துனன்-(மேலும் நாங்கள்) உனது காந்தனுடைய, பேர் பாட- திருநாமங்களைப் பாடுவதற்காக (வந்திருப்பதால் அது உனக்கு மிகவும் அபிமதமானதுபற்றி), சீரார் வளை ஒலிப்ப—அழகிய கைவளைகள் சப்திக்கும்படி, செந்தாமரை கையால்—செந்தாமரை போன்ற உன் சிவந்த கையால், மகிழ்ந்து வந்து திற

வாய்- மனமகிழ்ச்சியுடன் வந்து கதவைத் திறக்கவேண்டும்; எல் ஓர் எம் பாவாய்—['தாமரைக் கை' என்றதால், விரல்கள் தளங்களாகவும் பந்து கர்ணிகாரமாகவும் நிரூபிக்கப்பட்டதாகக் கொள்ளவேணும். முற்பட உனது கர விலாஸத்தையும் முக விலாஸத்தையும் கண்டு ஆநந்தித்துப் பிறகு உன் மைத்துனன் பேர் பாடுவதே எங்களுக்கு ஸ்வாதுதமமாகும். கற்பகத் தளிர் போன்ற உன் செந்தாமரைக் கையை நாங்கள் ஸேவித்தவாறே, உன் மணாளனுடைய செந்தாமரைக் கண்ணின் குளிர்ந்த கடாக்ஷம் எங்களுக்கு ஸித்திப்பது நிச்சயம் என்பது கருத்து. இத்தால், பகவத் ப்ராப்திக்குத் தடையாயிருக்குமவை யெல்லாம் புருஷகாரமாய் நிற்கும் லக்ஷ்மியின் ப்ரஸாதத்தால் விலக்கப்பட்டுக் கோரின பரமபலம் உடனே கிடைக்கு மென்பது வ்யஞ்ஜிதம். 'மகிழ்ந்து' என்றதால், மாதாவுக்கு ப்ரஜைகளின் குறைகளை நீக்கி வேண்டுவதைத் தருவதி லுள்ள ஹர்ஷாதிஶயம் பேசப்பட்டது. அபீஷ்டதாநத்துக்கு உறுப்பாகவே 'செந்தாமரைக் கை' என்று தக்ஷிண கராம்புஜம் ப்ரஸ்தாவிக்கப்பட்டதுபோலும். 'பந்தார் விரலீ உன் மைத்துனன் பேர் பாட' என்றதால், நாம் எல்லோரும் பந்து விளையாடும்போது கண்ணனுடைய திருநாமங்களைப் பாடி விளையாடுவதை உனக்கு நினைப் பூட்டுகிறோம் என்றும் ஸூசிதம். வழக்கம்போல் நாம் ஒருங்கு சேர்ந்து அவனது திருநாமங்களைப் பாடிக் கொண்டு பந்து விளையாடுவோம்; அதற்குத் தடையாய் நிற்கும் கதவை விலக்கு என்பது கருத்து.]

திருவாய்ப்பாடியில் பகவான் எழுந்தருளியிருக்கையில் நந்தகோபர் திருமாளிகையில் ஏகஶயநத்தில் நப்பின்னைப் பிராட்டியோடு கண்ணன் கண் வளர்ந்தார் என்பது ஸ்ரீ பாகவத வ்ருத்தாந்தத்துக்கு அநுகுணமாகாதென்ற ஶங்கைக்கு ஸமாதாநம், ஆண்டாள் இங்கு ஸ்ரீ வடபத்ரஶாயியின் திருக்கோயிலையே நந்தகோபர் திருமாளிகையாகப் பாவித்தாரென்று முன் கூறியதற்கேற்ப, அவ்வெம்பெருமானுக்கு ராத்ரியில் திருக்காப்பு ஸமர்ப்பிப்பதற்கு முன் ஶயநாஸநம் ஸமர்ப்பித்துப் போக நாச்சியாருடன் மஞ்ச ஸேவையாய் அத்திருக் கோலத்துடன் திருக்காப்பிட்டுப் பிறகு விடியற்காலத்தில் திருக்காப்பு நீக்குவதற்குப் பூர்வாங்கமாய் ஸுப்ரபாதம் காநம் பண்ணும் ஸந்தர்ப்பத்தை மநஸ்ஸில் வைத்து இவ்வாறு வர்ணிக்க நேர்ந்தது என்பதே யாகும்.

இவ்வாறு ப்ரார்த்தித்தும் அவர்கள் துயிலெழாமை யிருப்பதைக் கண்டு ந்யாயோபந்யாஸ பூர்வம் உபாலம்ப கர்ப்பமாய் ஸம்போதிக்கிறார்கள்.

19. குத்து விளக்கெரியக் கோட்டுக்கால் கட்டில்மேல்
மெத்தென்ற பஞ்ச சயனத்தின் மேலேறிக்
கொத்தலர் பூங்குழல் நப்பின்னை கொங்கைமேல்
வைத்துக் கிடந்த மலர்மார்பா வாய்திறவாய்
மைத்தடங் கண்ணினாய் நீயுன் மணாளனை
எத்தனை போதும் துயிலெழ வொட்டாய்காண்

எத்தனை யேலும் பிரிவாற்ற கில்லாயரல்
தத்துவ மன்று தகவேலோ ரெம்பாவாய்.

[பதவுரை] குத்துவிளக்கு எரிய-(நாற்புறமும் ஸ்திர ப்ரதிஷ்டிதமான) தீபங்கள் எப்போதும் ப்ரகாசித்துக்கொண்டிருக்க, கோடு கால் கட்டில்மேல்—யானைக் கொம்பினால் செய்த கால்களையுடைய கட்டிலின் மீதுள்ள, பஞ்ச சயனத்தின் மேல் ஏறி- (படுப்பவர்க்கு ஸுகத்தைத் தருவதற் குரிய பரிசுத்தி, குளிர்ச்சி, ஆநுகூல்யம், பரிமளம், மார்த்தவம் என்னும்) ஐவகைக் குணங்கள் அமைந்த மெத்தென்ற சயனத்தின் மேல் ஏறி, [பஞ்ச குணங்களில் மார்த்தவம் சேர்ந்திருந்தபோதிலும் தனியாக 'மெத்தென்ற' என்று இக்குணத்தை இரட்டித்துச் சொன்னது அதன் ஆவச்யகதை தோற்றுவதற்காக. அல்லது சரீரத்தில் ஸம்பந்தப்படும் மேல்பாகத்தை 'மெத்தென்ற' வென்றும், அதற்குக் கீழே யுள்ள ஹம்ஸதூலிகை முதலியவற்றைக் குண பஞ்சகத்தில் ஒன்றாகவும் பிரித்துக் கூறியதாகவும் கொள்ளலாம். அல்லது 'பஞ்ச' சப்தம் விசால வாசியாகையாலும், 'அகலமுள்ள படுக்கை' என்றும் கொள்ளலாம். அல்லது: பாதம், சரீரம், ஸோபாநம், பர்யங்கம், விதாநம் என்னும் பஞ்சாவயவங்களோடு கூடிய தென்றும் கொள்ளலாம்] கொத்து அலர் -கொத்துக் கொத்தாக மலர்ந்திருக்கிற, பூங்குழல்—புஷ்பங்களால் அலங்கரிக்கப்பட்ட கூந்தலையுடைய, நப்பின்னை கொங்கைமேல் – நப்பின்னைப் பிராட்டியின் ஸ்தநத்தின்மீது, வைத்துக் கிடந்த—, மலர் மார்பா—மலர் போன்ற ஸௌகுமார்யம் வாய்ந்த மார்பை யுடையவனே! [அல்லது வைஜயந்தீ மாலையை அணிந்த வக்ஷஸ்தலத்தை இணைத்துச் சயனித்திருக்குமவனே!] வாய் திறவாய்—சயந க்ருஹ த்வாரத்தைத் திறக்கவேணும். [அல்லது வாய் திறந்து பேசவேணும்.] [இவ்விதமாகப் புருஷகாராபேக்ஷையின்றி நேராகவே பகவானை ப்ரார்த்தித்தால் பல லாபத்துக்கு ப்ரஸக்தி யில்லாதது கண்டு, புருஷகார ப்ரார்த்தனை அவர்ஜநீய மென்று எண்ணி ப்ரகாராந்தரேண,

'ஸ்வஸ்தாஃ ந்ருதவெவெஜ ஹஃ விதாஜெ ஸியிஷாயிவஃ ।
நாஜஜாஜா தஸ ஹாவத்ஷியம்வாசா ஷவிஶு ஹழ ॥'

என்ற கணக்கிலே உபாலம்ப க்ரமத்தை அவலம்பித்துப் பேசுகிறார்கள்.] மை தடம் கண்ணினாய்—மையிட்ட விசால நேத்ரங்களை யுடையவளே! [இந்த ஸம்போதநத்தினால் இவளுடைய கண்கள் ஸ்வாபாவிகமாகவே அழகு வாய்ந்திருப்பது போதாதென்று நினைத்துப் பகவானுக்குத் தன்னிடம் வ்யாமோஹத்தைப் பெருக்க நினைத்து, இவள் ப்ரயத்ந புரஸ்ஸரமாய் அவைகளுக்கு அஞ்ஜநமிட்டு அவைகளின் ஆகர்ஷக சக்தியை வ்ருத்தி செய்வித்தபடியால், இவளது நேத்ர விலாஸத்தில் ஈடுபட்டுப் பகவான் இவளை விட்டுப் பிரிவதில்லை யென்பது ஸூசிக்கப்படுகிறது.] உன் மணாளனை—உனது ப்ரியதமனை, எத்தனை போதும்—எப்போதும், நீ துயில் எழ ஒட்டாய்—தூக்கத்தினின்றும் எழும்படி நீ செய்யவில்லை. [உனது ப்ரியதமன் உன் வசம் அகப்பட்டுக் கொண்டதால், அவன்

189247

ஒருபோதும் உன்னை விட்டுப் பிரியாவண்ணம் உறங்கிக் கிடக்கும்படி செய்கிறு யல்லவா? அபிமந்த்ரிதமான மையைக் கொண்டு ஸ்த்ரீகள் தம் புருஷர்களை வஶப் படுத்தும் லோகாநுபவம் இங்கு வ்யஞ்ஜித மென்றும் கொள்ளலாம்.] எத்தனை யேலும்—சிறிது கூட, பிரிவு ஆற்ற கில்லாய் ஆல்—ப்ரியதமனை விட்டுப் பிரிய மன மில்லாதவளாய் இருக்கிறு யாதலால், தத்துவ மன்று தகவு அன்று—லோக ந்யாயத் துக்கும் ஒவ்வாது; விஶிஷ்ய உங்களுக்குச் சிறிதும் தகாது; அல்லது உங்கள் ஸ்வரூபத்துக்கும் விருத்தம்; ஸ்வபாவத்துக்கும் விருத்தம். அதாவது: உன்னு டையவும் உன் ப்ரியனுடையவும் ஸ்வரூப ஸ்வபாவங்களுக்கு விருத்த மென்று கருத்து. இங்கு ஸ்வரூப விரோத மென்ன வென்றுல்: ஸ்வேதர ஸமஸ்த ஜகத் துக்கும் ஶேஷியா யிருப்பதையே ஸ்வரூபமாகவுடைய திவ்ய தம்பதிகள், தமக்கு ஶேஷபூதர்களான எங்கள் விஷயத்தில் உபேக்ஷை செய்வது தமது ஶேஷித்வத்துக்கு அநநுகுண மென்பதும், புருஷகார ஸ்வரூபத்தை விஶேஷித்து வஹிக்கும் பிராட்டிக்கு இது அத்யந்தம் அநுபபந்நம் என்பதுமேயாம். ஸ்வ பாவ விரோதமாவது: வாத்ஸல்ய ஔதார்ய காருண்யாதி கல்யாண குணகண மஹோததியாய் ஆஶ்ரிதார்த்திஹரண ஜாகரூகனுய் ஶரணாகத ஸம்ரக்ஷண வ்ரத தீக்ஷிதனுய் நிற்கும் எம்பெருமானுக்கும் அவனது ப்ரஜா ரக்ஷண ஸங்கல்பத்தைத் தலைக் கட்டுவதையே தன் கடமையாகக் கொண்ட ஜகந்மாதாவுக்கும் பொருந்தா தென்பதே. இப்பாசுரமே 'நீளாதுங்க.........ஏவாஸ்து பூய:' என்று ஸ்ரீ பராஶர பட்டர் அநுஸந்தித்த தனியனுக்கு மூல ப்ரமாணமாகக் கொள்ளத்தகும். இதில் பூர்வார்த்தத்தில் இப்பாசுரத்தின் விஷயம் ஸங்க்ர ஹிக்கப்பட்டு, இதன் ப்ரயோஜநமாகப் பகவான் ஆண்டாளுக்கு வஶம்வதரான வ்ருத்தாந்தம் உத்தரார்த்தத்தில் பேசப்பட்டது. ஒரு மஹா கஜம் மலைத் தடத் தில் தூங்கிக்கொண்டிருக்கும்போது அதை ஒரு பெண் யானை எழுப்பித் தன் வஶமாக்கித் தன் பின் செல்லும்படி செய்து, தானிட்ட வழக்காய் அதனை அநுபவிப்பதற்கும், அல்லது அதைப் பிடிப்பதற்காக வந்திருப்பவர்கள் வைத் திருக்கும் சங்கலிகளால் கட்டுண்ணப் பண்ணி அவர்கள் அதை இஷ்டப்படி உபயோகிப்பதற்கும் ஹேதுவாகும் ஸந்தர்ப்பம் இதனல் த்வநிக்கிறது. 'தத்துவ மன்று, தக வன்று' என்றிப் பாசுரத்தில் வ்யதிரேக முகமாய் ஸங்க்ரஹிக்கப் பட்டதற்கு, மேல் பாசுரங்களில் விவரிக்கும் க்ரமத்தை அநுஸரித்து, இந்த ச்லோகத்தில் 'பாரார்த்யம் ஸ்வம்...........அத்யாபயந்தீ' என்று வ்யாக்யாநம் கூறப்பட்டது போலும். இங்கு 'ஸ்வம் பாரார்த்யம்' என்பதில் 'ஸ்வ' ஶப்தத் தால், ஆண்டாள் உட்பட பகவானுக்கு ஶேஷபூதமான ஸமஸ்த ஜீவர்களும் விவக்ஷிக்கப்படுகிறுர்கள். 'ஶேஷ: பரார்த:' என்கிற ந்யாயத்தால் 'பாரார்த்ய' ஶப்தத்தால் ஶேஷத்வ ஸாமாந்யம் கூறப்பட்டபடியால், 'ஸ்வ' ஶப் தத்தை ஒரு வ்யக்தி விஶேஷத்தில் ஸங்கோசிப்பது யுக்த மாகாது. இதை வைத்தே பின்பு 'ஶ்ருதிஶதஶிரஸ்ஸித்தம்' என்று விஶேஷிக்கிறுர். 'யஸ்யாத்மா ஶரீரம்' முதலிய வேதாந்த வாக்யங்கள் இத்தால் ஸூசிதங்கள். இந்த வ்ருத்தத்திலும் ஆண்டாள் மற்ற கோப கந்யகைகளுடன் கூடப் போய் இப்பாசுரத்தை அநுஸந்திப்பதால் இதன் அர்த்தம் எல்லாரிடமும் அந்வயிக்கு மாகையால், ஆண்டாள் விஷயத்தில் மட்டில் இதை ஸங்கோசிக்க இடமில்லை.

ஆனல் திருப்பாவை யென்கிற பாமாலையை அருளிச்செய்தது ஆண்டா ளாகை யால், பட்டர் 'ஸ்வஹ்ராவயஷீ' என்று ஏகவசநம் ப்ரயோகித்திருக்கிறுர் போலும். அல்லது: இங்கு 'ஸ்வ' ஶப்தத்துக்கு 'ஹவநீயம்' என்று அர்த் தம் கொண்டால் 'வாஜாயகூூம்' என்பதற்கு 'வஶவூயொஜநெநகவூவர்த்தி கக்ஷம்' என்று அர்த்தம் கொள்ளவேணும். அப்படியாகில், 'நஜெகஸ்ரீ ஹூவாபூய:' என்றபடி யாதொரு பற்றுமில்லாமல் அவாப்த ஸமஸ்த காமனுய் நிற்கும் பகவான் ஆச்ரிதர்களுடைய குறைகளை நீக்குவதையே தன் வ்யாபார மாகக் கைக் கொண்டிருக்க, இவ்வாறு தாம் உறங்கிக்கிடந்து ஆர்த்த க்ருந்தநங் களுக்குச் செவி தாழ்த்தாம லிருப்பது அவனது ஸ்வரூபத்துக்கும் ஸ்வபாவத்துக் கும் தகுந்த தல்ல வென்கிற தத்வார்த்தத்தை அவனுக்கே விளக்கிக் காட்டினுள் ஸ்ரீ விஷ்ணு சித்தர் புதல்வி என்று தாத்பர்யம். இப்படியில் ஆண்டாள் பாடிக் கொடுத்த பாமாலையால் பெருமாள் ப்ரதிபுத்தராய் இவளிடம் ப்ராவண்யம் ஏற்பட்டதின் பேரில், இவளுக்கு யௌவந தசை வந்த பிறகு இவளது பகவத் பக்தி ஸ்வரஸமாய் ச்ருங்கார ரூபமாய்ப் பரிணமித்தபோது, இவள் சூடிக் கொடுத்த பூமாலையால் கட்டுப்பட்டு, இவளது அத்யுத்கடமான பாரமைகாந்த் யத்துக்குத் தாம் தவிர வேறு போதுமான பரிசு கிடையாதென்று நிச்சயித்து, இவள் கோரினபடியே தம்மை இவள் பதியாக அடைந்து யதேச்சையாக அநுபவிக்கும் பாக்யத்தைப் பெறும்படி அநுக்ரஹித்தா ரென்கிற விஷயம் உத்தரார்த்தத்தில் கூறப்பட்டது.

இதை நோக்குங்கால் இந்த ச்லோகத்தின் பூர்வார்த்தம், ஆண்டாள் தன் இளமைப் பர்வத்தில் பகவானிடம் தான் ஈடுபட்ட ப்ரகாரத்தைத் தெரி விப்பதன் மூலமாய், லோகத்துக்கு உபதேஶ ரூபமாக ப்ருவ்ருத்திப்பித்த திருப் பாவையின் ஸாராம்ஶ ஸங்க்ரஹ மென்றும், உத்தரார்த்தம், ஆண்டாள் பதிஸம் யோக ஸுலபமான வயஸ்ஸை அடைந்தபிறகு தனக்கே அஸாதாரணமான ப்ரே மாதிஶயத்தால் பகவானைப் பதியாகக் கோரி அடைந்து, தான் மநோரத பூர்த்தி யைப் பெற்ற ப்ரகாரத்தை 'நாச்சியார் திருமொழி' முதலியவைகளில் வெளி யிட்ட ரீதியை அவலம்பித்துச் சுருங்கச் சொன்னதாகவும் கொள்ள ப்ராப்தம். ப்ரியா காந்தர்களுடைய அந்தரங்கமான போகாநுபவத்தை வ்யங்க்ய வ்ருத்யா ஸூசிப்பது உத்தம காவ்ய லக்ஷணமாயிருக்க, இப்பாசுரத்தில் இப்படி வ்யக்த மாக வர்ணித்திருப்பது ரஸபங்க மாகாதோ வென்கிற ஶங்கை சிலர் மனத்தில் ஏற்படக்கூடும். ஆனல் இந்த ஸந்தர்ப்பத்தைச் சற்று ஊன்றிக் கவனித்தால் இதற்கு ஸமாதாநம் தெளிவாகும். இது அந்தப்புரத்துள் அந்தரங்கர்களான ஸ்த்ரீகளின் கோஷ்டியில் நடந்த விஸ்ரம்ப பூர்வகமான உபாலம்ப வசநமான படியால், ஸ்வபாவோக்தியில் சேர்ந்து காவ்யரஸத்தைப் போஷிக்குமேயன்றிப் பங்கப்படுத்தாது.

'தத்துவ மன்று தக வன்று' என்பதால், ஸூர்யோதயமானபிறகு கூட இம்மாதிரி உறங்கிக்கொண்டிருப்பது உசிதமல்ல வென்பது ஸூசிதம். இப்படி உறங்குவதற்கு ஆலம்பந ஹேது, தீபங்களின் ப்ரகாஶம், ஶயநத்தின்

ஸௌக்யம், ப்ரியா ஸம்ச்லேஷம் முதலிய போகஸம்ருத்தி யென்பது 'குத்து விளக் கெரிய' இத்யாதியால் கூறப்பட்டது. நாற்புறமும் மூடப்பட்ட பெருமாள் கர்ப்ப க்ருஹத்தைப் போன்ற அறைக்குள் தீபங்கள் எரிந்துகொண்டிருக்க, வெளியில் உள்ள ஸூர்ய ப்ரகாஶம் தெரியாததால், இரவு முடிந்த விஷயமே தெரியாமல் உறங்கிக்கொண்டிருக்கிறார்கள் என்பது ஏற்படுகிறது.

மேலும் இங்குள்ள ஸந்நிவேஶத்தைக் கவனிக்குமளவில், ஆண்டாள், குடும்ப பரணத்தில் பொறுப்பை வஹித்த தர்ம பத்நீயானவள் தன் ப்ரஜை களைக் கூட்டிக்கொண்டு பர்த்தாவினிடம் சென்று தன் குறைகளைத் தெரி வித்துக்கொள்ள முயலும்போது, அவன் தனது போக ஸ்த்ரீயின் மயக்குகளில் ஈடுபட்டு, இவர்களை உள்ளே புக விடாமலும் வாய்திறந்து பேசாமலும் உபேக்ஷித்தால், குடும்பினியான பதிவ்ரதைக்கு ஈர்ஷையும் கோபமும் உண்டாகி அதிக்ஷேபம் பண்ணத் தொடங்கினால் எவ்வித வசந வ்யக்தி உண்டாகுமோ, அது இங்கு யதாவத்தாக ஆவிஷ்கரிக்கப்படுவதாகக் கொண்டால் அது மிகவும் ரஸிகாஸ்யமா யிருக்கும்.

" கவலொவஷு நா நாரவஸஹாவ நிஶஷுஈ வுவ-ஐயா௨-ஹுவிஶ ஹுமீயா ।
க்ஷணாண-வக் க்ஷிவுவராஶிகாமயா வு௨ஹஷஷயஜம் ௨ஹஂஷிஂ ௨ஹாஸ-ஜழ ॥ "

என்று பெரிய முதலிகள் ஸ்தோத்ர ரத்நத்தில் அருளிச்செய்தவாறு, திவ்ய தம்பதிகளின் பரஸ்பர ப்ரேம ரஸாநுபவத்தை அநுஸந்திக்கும் விஷயத்தில் லௌகிக ரீதியான மோபநாதி நிர்ப்பந்தங்கள் அவச்யமில்லை. ஶுக ப்ரஹ்மாதி மஹர்ஷிகள் ஆழ்வார்கள் முதலிய பாகவதாக்ரேஸார்களின் அநுஸந்தாந க்ரம மும் இதற்குச் சான்றாகும்.

இங்கு, 'குத்துவிளக் கெரிய' என்றும், 'பஞ்ச சயனத்தின்மேல்' என்றும் இப்படியில் வர்ணந ரீதியைக் கணிசித்தால், இதை ஒரு அபதேஶமாய்க் கொண்டு நித்ய விபூதியின் இருப்பை முக்ய விவக்ஷா விஷயமாய் எண்ணியது போல் தோன்றுகிறது. சுத்த ஸத்வமயமாய் ஸ்வயம் ப்ரகாஶமாய் நித்யோஜ் வலமாயுள்ள திவ்ய லோகத்தில் ஸ்ரீ வைகுண்ட விமாநத்தில் " வெக-ணெ த- ......ஹாமவதெவூஹ " என்றபடி பகவான் பிராட்டியுடன் நாகபர்யங்கத்தில் ஶயநித்துக்கொண்டு நித்யாநந்த பரிதனாய் இருக்கையில், அவனது லீலாவிபூதி யாகிய இவ்வுலகிலுள்ள ஆச்ரித வர்க்கங்கள் தங்களுடைய ஸம்ஸார க்லே ஶத்தை நிவர்த்தித்துத் தங்களை அவனுக்கு நித்யகைங்கர்ய யோக்யர்களாக்க வேணுமென்று ப்ரார்த்திப்பதற்காகச் சென்று 'யவநிகாஶயாஜமஹொஹி நீ' என்றபடி, தாங்கள் அவனை ஸாக்ஷாத்கரிக்கத் தடையாய் நிற்கும் ப்ரக்ருதி யாகிய திரஸ்கரிணீயை விலக்கவேணு மென்று முதலில் ப்ரதிபந்த நிவ்ருத்தி யைக் கோருவதும், அதற்குத் தங்கள் மாதாவாகிய பூத தாத்ரியை முன்னிட்டுச் செல்வதும் இதன் வ்யங்க்யார்த்தமாகக் கொள்ளத்தகும். அல்லது: க்ஷீரோத மத்யத்தில் பணாமணிகளால் ஜ்வலித்துக்கொண்டிருக்கும் ஆதிஶேஷனுடைய போக மண்டலமாகிய திவ்ய ஶயநத்தில் பகவான் லக்ஷ்மீ ஸமேதனாகக்

கண்வளர்ந் திருக்கும்போது, பூதேவியானவள் ப்ரஹ்மாதி ஸுர கணங்களுடன் சென்று தன் குறையை விண்ணப்பம் செய்யும் ஸந்தர்ப்பமும் இத்தால் ஸூசிதமாகக் கொள்ளலாம். ஸ்ரீ வைகுண்டத்துக்குத் ப்ரதிநிதியாய் இவ்வுலகத்தின் கண் அமைந்துள்ள திவ்ய தேசத்தில் பகவானது திவ்யாலயத்தில் அவனது ஸந்நிதிக்குள் நித்யோஜ்வலமாயிருக்கும் தீபங்கள் ப்ரகாசித்துக்கொண்டிருக்க, திவ்ய பர்யங்கத்தில் சயநாஸநத்தில் நாச்சியாருடன் ராத்ரியில் கண்வளர்ந்து ஸூர்யோதய காலத்தில் ஸுப்ரபாத கான பூர்வகமாய் ப்ரபோதநம் பண்ணப் படும் க்ரமம் இங்கு அநுஸந்திக்கப்பட்டதாகும்.

இப்படிப்பட்ட மஹார்த்தங்களைப் பொதிந்துகொண்டு இப்பாமாலைக்கு நாயக ரத்நம்போல் விளங்கும் இப்பாசுரத்தை, அதிகுசல ஸாரக்ராஹிணியான ஸ்ரீபட்டர் தாம் அருளிச்செய்த தனியனுக்கு ஆதாரமாகக் கைக்கொண்டது மிகவும் உபபந்நமே. ப்ரதாந ராஜமஹிஷியானவள் தனது நாயகன் வேறொரு ப்ரியதமையிடம் ஆஸக்தனாயிருப்பதைக் கண்டு, அவன்மீது கோபங்கொண்டு அவனது வ்யதிக்ரமத்தைக் கண்டநம்செய்து, அதற்கு சிக்ஷையாக அவனைத் தான் அணிந்த மாலையால் பந்தநம்செய்து வேறிடத்துக்கு ஸஞ்சரிக்க வொட்டாமல் நியமித்து, அதற்கு அவன் அநுநய பூர்வகமாய் க்ஷமைகொண்டதன்பேரில் சீற்றந் தெளிந்து, அதிக ப்ரேமையுடன் அவனை ஸம்ச்லேஷித்து, அஸக்ருத் அநுபவிக்கும் அந்தப்புர ஸம்ப்ரதாயத்தை இங்கு ஸ்ரீபட்டர் ஸூசநம் செய்திருக்கிறார். நித்ய விபூதியில் பெரிய பிராட்டியாருடன் திவ்ய போகங்களை அநுபவித்துக்கொண்டு நித்யாநந்த பரிதனாயிருக்கும் ஸ்ரீ வைகுண்ட நாதனையும் பெரிய பிராட்டியாரையும், லீலாவிபூதியில் தாப த்ரயங்களால் வருந்தும் பத்த சேதநர்பக்கல் கண்விழித்துப் பார்க்கவேணுமென்று பூமிப்பிராட்டி உத்போதநம் பண்ணும் க்ரமத்தில் இப்பாசுரம் அமைந்திருப்பதைப் பராமர்சித்து, இப்படி ஸ்ரீக்கும் ச்ரிய: பதிக்கும் தத்வோபதேசம் பண்ணி அவர்களை வசீகரித்து, ஸம்ஸாரி சேதநர்களுக்கு அவர்களுடைய கருணா கடாக்ஷ ப்ரஸரம் லபிக்கும்படி செய்த மஹோபகாரத்துக்காக '𑌤𑌸𑍍𑌯𑍈 𑌨𑌮 𑌇𑌦𑌮𑌿𑌦𑌂 𑌭𑍂𑌯 𑌏𑌵𑌾𑌸𑍍𑌤𑍁 𑌭𑍂𑌯𑌃' என்று பூமிப் பிராட்டியின் அம்சமாகிய ஆண்டாளை நோக்கி ஸ்ரீ பட்டர் கரண த்ரயத்தாலும் அநந்தமான தண்டன் ஸமர்ப்பிக்கிறார்போலும்.

[தொடரும்]

பெருமாளும் இளைய பெருமாளும் பிராட்டியும் ச்ருங்கிபேரபுரத்திலே விட்டருளின வன்று ஸ்ரீ குஹப்பெருமாள் இளைய பெருமாளைப் பார்த்து, "பெருமாளும் பிராட்டியும் கண்வளரா நின்றார்கள்; உமக்கிடாம்படி திருவடிகளிலே தலையாம்படி படுக்கை படுத்தேன்; நாங்கள் காடராய் அங்கே யிங்கே திரிகையாலே எங்களுக்கு உறக்கம் வராது; நீர் ராஜ புத்ரராகையாலே ஸுகுமாரர்; 'பரதாதிகள் வருவார்கள்' என்றஞ்சவேண்டா; நானும் என் பரிகரமு முண்டு; நீர் கண்வளர்ந்தருளும்" என்ன, "வாரீர்! மஹாராஜனை சக்ரவர்த்தி அறுபதினாயிர மாண்டு அநபத்யனாய் வருந்திப் பெற்ற ஸுகுமாரரான பெருமாள் தரைக்கிடை கிடக்க, எனக்குக் கண்ணுறங்குமோ? அவர்தாம் வஸிஷ்டாதிகள் கீழே தரையிலேயிருந்து மறிவர்; அதுவு மன்றிக்கே யிருக்கிற பிராட்டியோடேகூடக் கிடக்கிறபடி பாரீர்; ஆனபின்பு எனக்கு உறக்க முண்டாய் அது போகைக்கு அபிஸந்தி பண்ணியிருக்கிறேனல்லேன் காணும்; உறக்கம் தேட்டமாய்க் கிடையாமையாலே யிருக்கிறேன்.

கோ. ஸு.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

அர்ச்சாவதாரமும் சுபாச்ரயத்வமும்

[ஸ்ரீ. உப. V. ஸ்ரீநிவாஸையங்கார், பனஸ்வாடி பங்களா, கோரேகான், பம்பாய்.]

இப்பொழுது அரசாங்கத்தாரால் தேவாலயங்களின் தத்வங்களைப் பற்றி ஶாஸ்த்ர ரீதியாகப் பேச அர்ஹதையுள்ள வைதிகர்களின் ஏகோபித்த ஆக்ஷேபத்தைப் புறக்கணித்துச் செய்யப்பட்டிருக்கும் ஆலய ப்ரவேஶம் காரணமாக வைதிகர்களுக் குள்ளேயே விஶேஷ பிளவுகள் ஏற்பட்டு, ஸம்ப்ர தாயக் கட்டுப்பாடுகள் சிதறுண்டு கிடக்கின்றன. ஒரு சாரார், பஞ்சமர்கள் தேவாலயங்களில் ப்ரவேஶித்ததன் காரணமாக அவைகள் அசுத்தப்பட்டு விட் டதால், எந்த ஶாஸ்த்ரம் தேவாலயங்களில் பகவத் ஸாந்நித்ய மிருப்பதைப்பற்றிக் கூறுகிறதோ அதே ஶாஸ்த்ரம் பஞ்சமர்கள் ப்ரவேஶித்தால் ஸாந்நித்யம் போய் விடு மென்று கூறுகிறபடியால், ஸாந்நித்ய மில்லாத பிம்பத்தை அர்ச்சிப்பது தோஷமானதால் கோயிலுக்குப் போகக்கூடாது என்கிறார்கள். மற்றொரு சாரார், ஶாஸ்த்ர விஹிதமான விஷயத்தில் நம் இஷ்டம்போல் செய்யக்கூடா தென்றும், ராஜாங்கத்தாரால் செய்யப்பட்ட இந்தக் கார்யத்தால் பகவத் ஸாந் நித்யம் போய்விடா தென்றும், அதனால் பகவானுக்கு அசுத்தி ஸம்பவிக்கா தென்றும், நம்முடைய தினசரி கார்யங்களில் கூட ராஜாங்க உத்தரவை நாம் விஶேஷமாகக் கீழ்ப்படிந்து நடப்பது போல இதையும் ஒப்புக்கொள்ளவேண்டி யதுதான் என்றும் சொல்லுகிறார்கள். இரு கக்ஷியாரும் ஶாஸ்த்ர வச்யர்க ளானதாலும், இருவரும் ஶாஸ்த்ரத்தையே ப்ரமாணமாகச் சொல்வதாலும், எது சரி என்று ஆலோசிப்பது அவச்யம்.

இம்மாதிரியான விஷயங்களை விசாரிப்பதில், நம் ஸமூஹத்தில் ஏற்பட் டிருக்கும் சில துராசாரங்களையும் விசாரிக்கவேண்டி வருகிறதே யென்று மன வருத்த மடைகிறேன். அப்படி விசாரிப்பதில் அடியேற்கு யாரிடத்திலும் அபசாரப்பட எண்ண மில்லை. சொல்லும் விஷயங்களில் தோஷ மிருந்தால் பாகவதோத்தமர்கள் க்ஷமித்து அடியேனைத் திருத்திப் பணிகொள்ளவேணும்.

‘ ஸர்வாபராதஸஹத்வம் க்ஷமைதா ஸ்வதந்த்ரதா ’

இவ்விஷயங்களை ஶாஸ்த்ரம், ஸம்ப்ரதாயம், ஶிஷ்டாசாரம் என்னும் மூன் றையும் கொண்டு முடிவு செய்யவேணும். நம் ஸித்தாந்தத்தில், ஸ்ரீ வைஷ்ணவர் கள் அர்ச்சாவதாரத்தைக் கொண்டாடுவதற்கும் ஸ்ரீ வைஷ்ணவர் அல்லாத மற்றையோர் அர்ச்சாவதாரத்தைக் கொண்டாடுவதற்கும் நெடுவாசி உண்டு. அதை முதலில் அறிந்துகொள்ளவேணும். ஸ்ரீ வைகுண்டத்தி லிருக்கும் எம் பெருமானே ஸாக்ஷாத்தாக அர்ச்சாவதாரமாக அவதரிக்கிறு னென்பது ஸ்ரீ வைஷ்ணவர்களான நமது கொள்கை. ஆனதால் அர்ச்சை நமக்கு உபாய

மாயும் உபேயமாயும் ஆகிறது. மற்றவர்களுக்கு அர்ச்சை உபாய மாத்ரமே; உபேய மன்று.

1. ஶாஸ்த்ரம்:—ஶாஸ்த்ர ரீதியாக விசாரிக்குமளவில், 'த்வே வாவ ப்ரஹ்மணோ ரூபே மூர்த்தம் சைவாமூர்த்தம் ச' என்கிற ச்ருதிப்படி, பரமாத்மாவுக்கு இரண்டு ரூபங்கள் உண்டு. ஒன்று: ஸத்யம் ஜ்ஞாநம் அநந்தம் என்றபடி அமூர்த்தம். மற்றொன்று: மூர்த்தமான திவ்யமங்கள விக்ரஹம். இவைகளில், நித்ய விபூதியில் மூர்த்தமான ஸ்ரீமந் நாராயணனும், அர்ச்சாவதாரத்தில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானும் ஒன்றே. இதனை ஸ்ரீமததிகரண ஸாராவளியில் ஸ்வாமி தேஶிகன்,

'நித்யம் தத் ஸந்நிவேஶ்யம் பரதரஜகத: ஸ்வஸ்வபாவைஶ்ச தேவ:
பஞ்சாம்ஶாம்ஶம் ஸம்ஸார ஶாந்த்யை விபரிணமயதி வ்யூஹவத்யைஶ்ச விஹாரை: ॥"

என்று ஸம்ஶய மற ஸாதித்தார். [இதன் தாத்பர்யம்:—ஸ்ரீ வைகுண்டத்தில் அநந்த கருட விஷ்வக்ஸேநாதிகளால் 'ஸதா பஶ்யந்தி ஸூரய:' என்றபடி ஸேவிக்கப்படுகிற பரமாத்மா, ஜ்ஞாந பல ஐச்வர்ய வீர்ய ஶக்தி தேஜஸ் என்கிற ஆறு அஸாதாரண குணங்களை விடாமலே இந்தப் பூலோகத்தில் ஜநங்களை ஸம்ஸாரத்திலிருந்து உத்தீர்ணர்கள் ஆக்குவதக்கு வ்யூஹ விபவ அந்தர்யாமி அர்ச்சை என்கிற விதமாக அவதரிக்கிறான்.] இங்கு, இது ஸம்பந்தமாகச் சிந்தாமணியில் வரும் வாக்யங்கள் கவனிக்கத்தக்கவை.

"ஸ்வஸ்வபாவம் குணஜாதம் வைகுண்டவாஸிநோ பகவத:; ராமக்ருஷ்ணாத்யவதாரேஷு வ்யாக்ருத:, கதமேந ஸ்வபாவ ஸ்வபாவாதி ஹாநி: கதம் தேஷாமர்சாயமநே ஸ்வரூபம் ரூபம் ப்ரகீர்த்திதா ஸம்ஶயா பராஶர பராஶர்யாதி மதாநுஸாரேண ஸ்வரூபாகாரதயாதிகம் குணஜாதமாஹ—ஸஜாதீயத்வாதி நாமகம்ஸமேவேஷண ॥ ஸர்வஶக்திம் இத்யாதி பராஶர வசநம் । ந ஹ்யேதத் ஸம்ஸ்வரூபேணோ நித்யஹாஸ்ய பராத்பர: இதி பாராஶர்ய வசநஸ்ய நஸந்தேஹ: ॥ இதி ॥"

ஆனதால் நித்ய விபூதியிலுள்ள எம்பெருமானுக்கும், அர்ச்சாவதார ரூப எம்பெருமானுக்கும் வாசியில்லை யென்பது நம் பூர்வாசார்யர்களின் ஸித்தாந்தம் என்பது தெளிவாகிறது.

அமூர்த்தமான ஸத்யம் ஜ்ஞாநம் அநந்தம் என்ற பரமாத்மாவுக்கு ஶுபத்வம் உண்டாகிலும் ஆச்ரயத்வ மில்லை. மூர்த்தமான திவ்யமங்கள விக்ரஹத்துக்குத் தான் * சுபத்வமும் † ஆச்ரயத்வமும் உண்டு. இந்த சுபாச்ரயத்தை

---

* சுபத்வமாவது: எந்த அவஸரத்திலும் எவ்விதமான அசுத்தியும் ஸம்பவிக்க ஹேதுகூட இல்லாதிருத்தல். ஸம்ஸார வஶவர்த்தித்வமும் அசுபமே.

† ஆச்ரயத்வமாவது: த்யாந காலத்தில் மநஸ்ஸுக்கு எது புலப்படுகிறதோ அதற்கு ஆச்ரயத்வம் சொல்வார்கள். உதாரணமாக: ஒரு திவ்ய மங்கள விக்ரஹத்தை நாம் மநஸ்ஸில் த்யாநம் பண்ணின மாத்ரத்தில், அது மநஸ்ஸில் புலப்படுவதால் திவ்ய மங்கள விக்ரஹத்துக்கு ஆச்ரயத்வம் சொல்வார்கள்.

ஸ்ரீ பாஷ்யத்தில் ஸ்ரீ பாஷ்யகாரர் பின் வருமாறு ஸாதித்திருக்கிறார்:—

“ [illegible] । [illegible] ‘आदित्यवर्णं’ ‘इत्यादिवेदान्तसिद्धं [illegible] रूपं [illegible] इत्युक्तम् ॥ ”

இதையே நம் ஸ்வாமி தேசிகனும்,

> “ பகவத் ஸ்வரூபத்துக்கு ஶுபத்வ முண்டே யாகிலும் ஆச்ரயத்வ மில்லை. நித்ய விக்ரஹமான நித்யர்க்கும் ஆச்ரயத்வ முண்டேயாகிலும் ஸம்ஸார நிவர்த்தந க்ஷமமான சுபத்வ மில்லை. ஆகையால் திவ்ய மங்கள விக்ரஹத்துக்கே முமுக்ஷூபயுக்தமான சுபத்வமும் ஆச்ரயத்வமும் உள்ளன............இத்திவ்ய விக்ரஹம் பர வ்யூஹாத்யவஸ்தா பஞ்சகத்திலும் சுபாச்ரய மென்னுமிடம் ஶாஸ்த்ர ஸித்தம். ”

என்று ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்தில் விவரித்திருக்கிறார். ஆதலால் வைகுண்ட வாஸியான எம்பெருமானும் அர்ச்சாவதாரமும் ஸம மென்றும், அவர்களுக்குள் யாதொரு வாசியு மில்லை யென்றும் ஸம்ஶய மறச் சொல்லி, ஷாடி பரனுக்கும் அர்ச்சைக்கும் துல்யமாக சுபாச்ரயத்வம் ஸித்தாந்தமாகச் சொல்லியிருப்பதால், நித்ய விபூதியில் எம்பெருமானுக்கு எப்படி எவ்வித அசுத்தியும் ஸம்பவிக்காதோ அப்படியே அர்ச்சாவதாரத்திலும் அசுத்தி ஸம்பவிக்காதென்பது ஸித்தம். இந்த சுபாச்ரயத்வம் பகவானின் ஸ்வரூபத்தில் அஸாதாரணமாகச் சொருகி நிற்கும் விஷயம் என்பது ஞாபக மிருக்கவேணும்.

‘ [illegible] ’ ‘आदित्यवर्णं’ इत्यादिवेदान्तसिद्धं [illegible] रूपं [illegible] इत्युक्तमिति .... इत्यादिना परस्य ब्रह्मणः विष्णोः स्वरूपं स्वासाधारणमेव [illegible] इत्युक्तम् इति श्रीभाष्ये ॥’

தத்ஸமயம் ஆலய ப்ரவேஶத்தால் அர்ச்சைக்கு அசுத்தி வந்து ஸாந்நித்யம் போய்விட்டதாகச் சொல்லுமர்கள், விஶேஷமாகப் பாஞ்சராத்ராதி க்ரந்தங்களின் பலத்தைக் கொண்டு சொல்லுகிறார்கள்.

“ पञ्चरात्रस्य वक्ता साक्षान्नारायणः स्वयम् ”

என்பதால், அதுவும் அதை யொட்டிய இதர ஸ்ம்ருதி வாக்யங்களும் பரம உபாதேய மானவைகளே. அப்படியிருக்க, ‘அந்தப் பாஞ்சராத்ரத்தில் சொல்லியிருப்பதற்கு விரோதமாக எப்படி துஷ்டமான அர்ச்சையைக் கொண்டாடுவது?’ என்கிறார்கள். உண்மையே.

ச்ருதிகள் பரமாத்மாவை முதலில் ஸகல கல்யாண குண விஶிஷ்டனைகச் சொல்லி, பிறகு,

“நிர்கு3ணம் நிரஞ்ஜநம் நிஷ்கலம் நிஷ்க்ரியம் ஶாந்தம் நிரவத்3யம் நிரஞ்ஜநம்।

அதா2த ஆதே3ஶோ நேதி நேதி ந ஹ்யேதஸ்மாதி3தி நேத்யந்யத்பரமஸ்தி”

என்கிற ச்ருதிகளால் நிர்க்குணமானதைச் சொல்வதுபோல் உள்ள வாக்யங்களுக்கு எப்படி உபக்ரமத்தில் சொன்னதற்கு அநுகுணமான அர்த்தத்தையே நயநம் பண்ணவேண்டுமென்று சொல்லுகிறார்களோ, அப்படியே ஸ்வரூபத்தில் சுபாச்ரயத்வத்தைச் சொல்லி, அப்படி சுபாச்ரயமான பரமாத்மாவுக்குப் பூஜாதி கார்யங்களைச் சொல்லும் பாஞ்சராத்ரங்களில் முன் சொன்ன சுபத்வத்துக்கு விரோதமாக ஏதாவது வாக்யங்களில் அசுத்தி ஸம்பவிக்கு மென்று சொன்னால் அந்த வாக்யங்களுக்கும் முன் வாக்யங்களுக்கும் விரோத மில்லாமல் அர்த்தத்தை நயநம் பண்ணவேண்டும். அதுவே யொழிய, சுபத்வம் சொன்ன பெருமாளுக்கு நேர் விரோதமாக அசுபம் (அசுத்தி) ஸம்பவித்ததென்று சொல்லிவிட்டால் நித்ய விபூதி எம்பெருமானுக் குட்பட இந்தத் தோஷம் ஸம்பாவித மாகும். அப்படிய நித்ய விபூதி எம்பெருமானோடு வாசியில்லாத அர்ச்சைக்கு அசுத்தி சொன்னால், அர்ச்சையும் வைகுண்ட நாதனும் கூட பத்3த4 முக்த நித்யர்களுக்கு ஸமமாகி விடுவார்கள். அப்படியாகில்,

“உத்பத்த்யாதி3நாநாவஸ்தா2ஸம்ப3ந்த4: விஷ்ணோ: ஸ்வரூபமேவம் ஸ்வாபா4விகாநந்த3
சைவ ஶாஸ்த்ராஶ்ரய உத்பத்த்யாதி3”

என்கிற ஸ்ரீ பாஷ்ய வாக்யம் அர்த்த மில்லாததாய் விடும். ஆதலால் நித்ய விபூதி எம்பெருமானுக்கு எப்படி அசுத்தம் ஏற்படாதென்பது மறுக்க முடியாததோ, அப்படியே அதோடு வாசியில்லாத அர்ச்சைக்கும் எக்காலத்திலும் அசுபம் (அசுத்தி) ஏற்படாதென்று தோன்றுகிறது.

இங்குச் சிலர் “பெருமாளுக்கு அசுத்தி ஏற்படவில்லை; ஸ்ரீ ஶடாரியும் கர்ப்ப க்ருஹமும் மட்டிலும்தான் அசுத்தமாய் விடுகின்றன; ஆனதால், தீர்த்தம் ஶடாரியை விலக்கிப் பெருமாளை மாத்ரம் ஸேவிக்கலாம்” என்கிறார்கள். இந்த இடத்தில் ‘ப்3ரஹ்மலோக:’ என்பதற்கு ‘ப்3ரஹ்மணோ லோக: ப்3ரஹ்மலோக:’ என்று அர்த்தமா? அல்லது ‘ப்3ரஹ்மைவ லோக: ப்3ரஹ்மலோக:’ என்பதா? என்று விசாரித்து நிஷாத3ஸ்த2பதி ந்யாயத்தால் ‘ப்3ரஹ்மைவ லோக: ப்3ரஹ்மலோக:’ என்று ஸித்தாந்தம் செய்திருப்பது வேதாந்தத்தில் பரிசயமுள்ள எவரும் அறிந்த விஷயம். அதே ந்யாயத்தால் ‘பெருமாள் வேறு, திருவடி வேறு, கர்ப்ப க்ருஹம் வேறு’ என்று பிரிப்படுத்திச் சொல்வது உசிதமா வென்பது தெரியவில்லை. பெருமாளுக்குப் பரிசுத்தியை ஒப்புக் கொண்டால், பின் தீர்த்தம் ஶடாரி இவைகளுக்கு என்ன நிஷேதம்?

2. ஸம்ப்ரதாயம்:—ஶாஸ்த்ர விசாரம் இப்படியிருக்க, அர்ச்சாவதாரத்துக்கு ராஜாங்கத்தாரால் ஏற்படுத்தப்பட்டுள்ள கோட்பாடுகளால் ஆசாரங்கள் மாறுவது ஸம்ப்ரதாயத்தில் காணப்படுகிறது. ஸ்ரீரங்கத்தில் துலுக்க நாச்சியார் ஐக்யமானதின்மேல், நவாப் யதேஷ்டமாக ஸாமான்கள் அமுது

படைப்புக்கு அனுப்பி, தங்கள் ம்லேச்சாசாரப்படி அந்நத்தை வஸ்த்ரத்தில் வைத்து நிவேதிக்கவேண்டு மென்று ஞாபித்ததன் காரணமாக, நம் வழக்கப்படி வஸ்த்ரத்தில் அந்நம் பரிமாறுவது துராசாமானாலும், ராஜாஜ்ஞையின் காரண மாக அவ்வழக்கம் ஸம்ப்ரதாயத்திலும் வந்துவிட்டதன்றோ? ஸ்ரீ பாஷ்யகாரரும் கூட ஸ்ரீ பாஷ்யத்தில் 'ராஜாஜ்ஞாஸூசிகம்' என்று பூர்வ பக்ஷியைப் பார்த்துச் சொல்வதுண்டு. அதன் தாத்பர்யம் சரியோ தப்போ? இதனால் ராஜாஜ் ஞையை விசேஷ விதியாகக் கொண்டு அதற்குக் கீழ்ப்படியவேண்டு மென்பது புலப்படவில்லையா? ஸ்ரீ குலசேகராழ்வாரும் ராஜாஜ்ஞைக்குக் கீழ்ப்படிய வேண்டிய ஆவச்யகத்தைப் பின்வரும் பாசுரத்தால் தெளிவிக்கிறார்.

" மீனோக்கும் நீள்வயல்சூழ் வித்துவக்கோட் டம்மாவென்
பானோக்கா யாகிலுமுன் பற்றல்லால் பற்றிலேன்
தானோக்கா தெத்துயரம் செய்திடினும் தார்வேந்தன்
கோனோக்கி வாழும் குடிபோன் றிருந்தேனே."

ஆனதுபற்றி ராஜாஜ்ஞை தவறாக இருந்தாலும், அதை விசேஷ விதியாகக் கொண்டு கீழ்ப்படிய வேண்டியதே யொழிய அதை மீறுவது கூடாது. விசேஷ விதியின் கீழ் அநேக ஸமயத்தில் அசுத்தி இல்லை என்கிற சாஸ்த்ரம் இங்கும் பொருந்தும்.

3. சிஷ்டாசாரம்:—நம் ஸமூஹத்தில் ஜந்ம சண்டாளன் எவ்வளவு நிஷித் தமோ அவ்வளவு கர்ம சண்டாளனும் நிஷித்தன் என்பது ப்ரஸித்தம். அப் படிக்கிருந்தும், பெருமாள் ஸந்நிதியில் அந்தரங்கத்திலும் பஹிரங்கத்திலும் எவ் வளவோ பேர் அக்ருத்யகரண க்ருத்யாகரணாதி தோஷங்களால் ஸ்வரூபமே இழந் தவர்களாயிருந்தும், மஹநீயர்களான நம் பூர்வாசார்யர்கள் தங்கள் கையால் தீர்த்தம் வாங்கிக்கொள்ள வில்லையா? எவ்வளவோ பேர் அசாஸ்த்ரீயமான முறையில் தங்கள் சிகைகளை மாற்றிவைத்துக் கொண்டும் (crop), ப்ரௌடை யான பெண்களைக் கல்யாணம் பண்ணமலே வைத்துக்கொண்டும், சிகை எடுக் காத விதவைகளை வீட்டில் வைத்துக்கொண்டும், அபக்ஷ்ய பக்ஷணங்கள் பண் ணிக்கொண்டும், கர்மாவிலிருந்து நழுவினவர்களாயும் இருந்து வருகிறார்கள்? அவர்க ளெல்லாரும் பெருமாள் ஸந்நிதிக்கு வந்து தீர்த்தம் சடாரி வாங்கிக் கொண்டுபோக வில்லையா? இதுகாறும் இவற்றைப் பெரியவர்கள் க்ஷமித்து வந்ததற்குக் காரணம், ஸர்வோத்க்ருஷ்டமான பகவத் ஸந்நிதியில் சுபத்வத்தைத் தவிர்த்து அசுத்தி ஏற்படாதென்னும் கொள்கையினால் தானே.

ஒரு பிசகு நடந்ததை நிவர்த்திக்க முயலுங்கால், மற்றொரு பிசகை அதற்கு ஸமாதாநமாகச் சொல்லலாமா வென்று கேட்கலாம். வாஸ்தவம்தான். பிசகு என்பது இருவகைப்பட்டது. ஒன்று நிவார்யமானது; மற்றொன்று அநிவார்யமானது. இவற்றைச் சில உதாரணங்களால் விளக்குவோம். நம் மதக் கோட்பாடுகளுக்கு விரோதமாக க்ராப் (Crop) வைத்துக்கொண் டிருக்கும் பையன்களுக்கு நம் பெண்களைக் கொடுக்காமல் தவிர்க்கலாம். நம் ஆத்து மாப்பிள்ளைகள் க்ராப் வைத்துக்கொண்டால் அவர்களை விலக்கலாம்.

ஸிகை வைத்துக்கொண்டிருக்கும் விதவைகள் வீட்டில் போஜநம் செய்யாமல் தவிர்க்கலாம். ஸமுத்ர யாநம் செய்தவர்களுடைய க்ருஹத்தில் யாதொரு ஸம்பந்தமும் வைத்துக்கொள்ளாம லிருக்கலாம். இவை நிவார்யமான பிசகுகள். அநிவார்யமான பிழைகள் என்ன வென்றால் : ராஜாஜ்ஞையால் வரும் ஸதீ ப்ரௌடா விவாஹம் ஆலய ப்ரவேஸம் முதலியன.

இவற்றுள் : மேற்கூறிய நிவார்யமான பிசகுகளைத் திநம் திநம் அநேகர் செய்துகொண்டு, அநிவார்யமாக வரும் கார்யங்களைக் கொண்டு எங்கு அசுத்தம் ஸம்பவிக்காதோ அங்கு அசுத்தம் கல்பிப்பது உசிதமா வென்பது தெரியவில்லை.

எந்தத் திவ்ய மங்கள விக்ரஹத்தில் ஸாந்நித்யம் சொல்லப்படுகிறதோ, அந்த அர்ச்சைக்கும் நித்ய விபூதி எம்பெருமானுக்கும் வாசியில்லை யென்கிற,

'நித்யம் தத்ஸந்நிஹிதோ வ்யூஹ வஸுதேவஸ்ய ஸஹஸ்த்வஸ்ஸமாவஸ்த ஸுதேவ: ।'

இத்யாதி ச்லோகத்தால் அதிகரணஸாராவளியிலும், 'பரவ்யூஹாத்யவஸ்தா பஞ்சகத்துக்கும் சுபாச்ரயத்வம் உண்டு' என்று ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்திலும், ஸ்ரீ பாஞ்சராத்ரரக்ஷா க்ரந்த கர்த்தாவான ஸ்ரீ தேசிகனே நிர்த்தாரணம் செய்திருக்க, சுபாச்ரயமான அர்ச்சைக்கு எப்படி மறுபடி அசுத்தி கல்பிக்க முடியும்? அப்படி அசுத்தியைச் சொல்லும் வாக்யங்கள் இருந்தால், அவைகளுக்கு மேலே சொன்ன மாதிரி ஸ்வரூபத்துக்கு விரோத மில்லாமல் நயநம் பண்ண வேண்டுமே யொழிய வேறு மாதிரி கல்பித்துச் சொன்னால் ஸ்வரூப ஹாநி யல்லவா வரும்?

இதில் மற்றொரு துக்கிக்கக்கூடிய விஷயம். வைதிகர்களில் சிலர், கோவிலுக்குப் போனவர்களை ப்ராயச்சித்தம் செய்துகொள்ளச் சொல்லுகிறார்களாம். அக்ருத்யகரண க்ருத்யாகரணாதி தோஷங்களை அஹர்அஹரி தவறாமல் செய்பவர்களுக்கு இதுவரை யாதொரு ப்ராயச்சித்தமும் விதிக்கக் காணோம். இனி விதிக்க நினைக்காமலு மிருந்து, தாங்களும் அவர்களுடன் ஸமபங்க்தி போஜநாதிகள் செய்துகொண்டு; கோவிலுக்குப் போய்ப் பெருமாளை ஸேவித்தவர்களுக்கு மட்டில் ப்ராயச்சித்தம் விதித்தால், அதை எந்த அபசாரத்தில் சேர்ப்பது?

ஆகையால் பரிகணிதர்களான மஹான்கள், 'ஹரிஜந ப்ரவேஸத்தால் ஆலயத்துக்கு அசுபம் ஸம்பவிக்குமா?' வென்பதைத் தீர விசாரித்து, தங்கள் அபிப்ராயங்களைப் பக்ஷபாத மில்லாமல் வெளியிட வேண்டுகிறேன். அவ்வாறு வெளியிடுவது, ஆழ்வார், உடையவர், தேஸிகன் முதலிய பரமாசார்யர்களுக்குச் செய்யும் சிறந்த கைங்கர்யமாவதோடு, மந்த மதிகளான அடியேன் போல்வார்க்கும் ஓர் உஜ்ஜீவந ஹேது என்பது அடியேனுடைய அபிப்ராயம்.

ஸ்ரீ:

செய்திகள்

ஸ்ரீ பாஷ்யகாரர் திருநக்ஷத்ரம் — மாதுங்கா — பம்பாய்

ஸ்ரீ க்ருஷ்ண ஸபா சார்பில் 10 கெ. ப்ராம்ஹணவாடி மாதுங்காவில் 3-5-48-முதல் 12-5-48-வரை ஸ்ரீ பாஷ்யகாரர் திருநக்ஷத்ரம் வெகு விமர்சையாய் நடந்தது. பம்பாயிலுள்ள ஸ்ரீ வைஷ்ணவர்கள் அனைவரும் மிகுந்த உத்ஸாஹத்துடன் அம்மஹோத்ஸவத்தை நடத்திவைத்தனர். சாற்றுமறை யன்று திருக்குடந்தையிலிருந்து ஸ்ரீ. உ. ப. ஸ்ரீநிவாஸ ராகவாசாரிய ஸ்வாமி இவ்விடம் எழுந்தருளினார். அந்த ஸ்வாமி காலையில் ஸ்ரீ பகவத் விஷய காலக்ஷேபங்களும், இரவில் ஸ்ரீமத் ராமாயண உபந்யாஸங்களும் ஸாதித்துக் கொண்டு வருகிறார்.

P. N. திருமலைதாஸன்
(கார்யதரிசி)

* * * *

ஸ்ரீ பாஷ்யகாரர் திருநக்ஷத்ர மஹோத்ஸவம்

தேவக்கோட்டையில் ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகன் ஸந்நிதியில், ஸ்ரீ பாஷ்யகாரர் திருநக்ஷத்ர மஹோத்ஸவம் வழக்கம்போல் சித்திரைமீ 26உ (8–5–48) சனிக்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்டு, வேத பாராயண திவ்யப்ரபந்த பாராயணங்களுடன் யதா க்ரமம் நடைபெற்றது. இவ்வுத்ஸவத்துக்கு, ஸ்ரீமதஹோபில மடம் ஆஸ்தான வித்வான் தேசிக தர்ஶந விஜயத்வஜ புத்தங்கோட்டகம் ஸ்ரீ. உ. ப. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி எழுந்தருளினார். 29உ (11–5–48) செவ்வாய்க்கிழமை ஸாயம் 4-மணிக்குப் பெருமாள் ஸந்நிதி வாசலில் "மநுஷ்ய ஜந்ம ப்ரயோஜநம்" என்கிற விஷயம் ஷை ஸ்ரீ ஸ்வாமியால் விஸ்தாரமாக உபந்யஸிக்கப்பட்டது. அப்போது வக்கீல் ஸ்ரீ. உ. ப. ஜகந்நாதையங்கார், ஸ்ரீ. உ. ப. K. ஸ்ரீநிவாஸையங்கார் முதலிய லௌகிக ப்ரமுகர்களும், ஸ்ரீ. உ. ப. திருமலாசார்யர் முதலிய வித்வான்களும் ஸந்நிஹிதர்களாக எழுந்தருளியிருந்து, ஸ்வாமியின் உபந்யாஸத்தைக் கேட்டு ஆநந்தித்தார்கள். பிறகு ஸ்ரீ வில்லிபுத்தூர் ஸ்ரீ. உ. ப. தாதாசார்ய ஸ்வாமி, திருப்பாவையி லிருந்து 4, 5 பாசுரங்களை எடுத்துப் பரக்க உபந்யஸித்தார்.

மறுநாள் புதன்கிழமை சாதுமறைக்கு அநந்தரம், ஸாயங்காலம் 4-மணிக்கு ஸ்ரீ. உ. ப. புத்தங்கோட்டகம் ஸ்வாமி "ஸ்ரீ பாஷ்யகார மஹிமா" என்பதுபற்றி அழகாக உபந்யஸித்தார். தத்நந்தரம் ஸ்ரீ வில்லிபுத்தூர் ஸ்வாமி, திருப்பாவையில் மற்று முள்ள சில பாசுரங்களை எடுத்துக்கொண்டு விரிவாக உபந்யஸித்தார். பிறகு வித்வான் ஸ்ரீ. உ. ப. திருமலாசார்ய ஸ்வாமி, ஸ்ரீ பாஷ்யகாரர் அருளிச்செய்த எட்டு க்ரந்தங்களுடைய ஸாராம்ஶத்தைப் பற்றியும், திருவல்லிக்கேணி வக்கீல் ஸ்ரீ. உ. ப. கேஶவய்யங்கார் ஸ்வாமி ஸ்ரீ பாஷ்யகாரர் மஹிமையைப் பற்றியும் பரக்கப் பேசினார்கள்.

மறுநாள் வியாழக்கிழமை ராத்ரி 8-மணிக்கு ஸ்ரீ. உ. ப. புத்தங்கோட்டகம் ஸ்வாமி "ஸ்ரீ பாஷ்யகார ஸம்மதமான விஶிஷ்டாத்வைத மதத்தின் தத்வ ஹித புருஷார்த்தங்கள்" என்பதுபற்றி ஆச்சர்யமாக உபந்யஸித்தார். மீண்டும், பல பேருடைய ப்ரார்த்தனைக் கிணங்கி ஸ்ரீ புத்தங்கோட்டகம் ஸ்வாமி வைகாசி 1உ வெள்ளிக்கிழமை ராத்ரி 8-மணிக்கு அக்ரஹாரத்தில் "ஸூக்தம்" என்கிற விஷயத்தை ஆரம்பித்துக்கொண்டு, அதனுடைய அவாந்தர பேதங்களைப் பரக்கக் காட்டி, "ஸ்ரீ பகவத் ராமாநுஜன் முதலான பூர்வாசார்யர்களுடைய ஸ்ரீ ஸூக்திகளின் மூலமாக அநுஸந்திக்கப்படும் பகவத் குணாநு

பவங்களே பெரிய ஆநந்தம்; பரமஸுகம்" என்று அநேக ப்ரமாண விசேஷங்களைக் கொண்டு நிரூபித்தார். ஷை உபந்யாஸத்தை யாவரும் அளவிறந்த ஸந்தோஷத்துடன் கேட்டு ஸ்வாமியைக் கொண்டாடினர்.

S. வேங்கடநாதையங்கார்,
(தேவக்கோட்டை.)

* * * *

ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம ஸபா, தேரழுந்தூர்

இவ்வூர் ஸ்ரீ ஆமருவியப்பன் சென்ற 19–5–48 முதல் 30–5–48 வரை விசேஷமாக ப்ரஹ்மோத்ஸவம் கண்டருளினன். அம்மஹோத்ஸவத்திற்கு அத்யாபக வேதபாராயண ஸ்வாமிகள் பலர் எழுந்தருளப்பண்ணப்பட்டனர். அவர்களுக்குத் ததீயாராதநம் ஸம்பாவனை முதலியவைகளை, இவ்வூர் ஸ்ரீ அஹோபில மடத்தில் ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் அநேக ஆஸ்திகாக்ரேஸரர்களுடைய விசேஷ த்ரவ்ய ஸஹாயத்தைக் கொண்டு விசேஷமாக நடத்திக்கொண்டான்.

இவ்வுத்ஸவத்தில் 26—5—48-ல் ஷை மடத்தில் ஷை ஸபையின் ஆதரவில் திருவையாறு ஸம்ஸ்க்ருத கலாசாலை வைஸ் ப்ரின்ஸ்பால் ஸ்ரீ. உப. S. T. ஸ்ரீநிவாஸாசார்யர் (M. A. L. T., வித்வான்) ஸ்ரீ. உப. கோபாலையங்கார் ஸ்வாமி தலைமையில் ஸ்ரீ கோதா ப்ரபாவம் என்னும் விஷயத்தை உபந்யஸித்தார்.

26—4—48-ல் நடந்த பொதுக்கூட்டத்தில், இது முதல் தேரழுந்தூர் ஸ்ரீ ஆமருவியப்பன் ஸந்நிதியிலும், ஸ்ரீ. அ. மடம் ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ ஸ்வாமி ஸந்நிதியிலும், உத்ஸவ காலங்களிலும் மற்றைக் காலங்களிலும் ஔசித்யத்துக்குத் தக்கபடி அத்யாபக வேதபாராயண கைங்கர்யங்களை நடத்தி வரவும், ஷை ஸ்ரீ. வி. ஸ. ஸபையின் கிளை ஸ்தாபநமாக ஆறுபேர்கள் அடங்கிய ஒரு கமிட்டி இருந்துவர வேணுமாய்க் கோர, அது ஏக மனதாக நிறைவேற்றப்பட்டது.

இவ்வர்ஷம் ஸ்ரீ ஆமருவியப்பனுடைய ப்ரஹ்மோத்ஸவத்தில் உபய கோஷ்டி கைங்கர்யம் செய்த பாராயண ஸ்வாமிகளுக்கு ஸ்ரீ. உப. N. R. க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி ஸம்பாவனைகள் செய்து, 'வேத வைபவம்' என்பதுபற்றி உபந்யாஸமும் செய்தருளினர்.

30–5–48-ல் ஸ்ரீ கோஸகனுடைய விடாயாற்றி உத்ஸவம் ஸ்ரீ அழகிய சிங்கருடைய மண்டபப்படி யாதலால், ஸ்ரீ கோஸகன் ஸ்ரீ மடத்துக்கு எழுந்தருளி விசேஷ திருமஞ்சனாதிகள் கண்டருளினர். அன்றிரவு ஸ்ரீ. உப. N. R. K. ஸ்வாமி அர்ச்சையின் பெருமை என்பதுபற்றி உபந்யாஸம் செய்தருளினர். இவ்வுபய கோஷ்டி கைங்கர்ய விஷயமாய் ஸ்ரீ அழகிய சிங்கர் முதலான மஹான்களிடமிருந்து ஆசீர்வாத பத்ரங்கள் ஏராளமாக வந்தன. இனி வரும் வர்ஷங்களில் இவ்வுபய கோஷ்டி கைங்கர்யங்களுக்கு ஆஸ்திகர்களான மஹான்கள் தாராளமாக த்ரவ்ய ஸஹாயம் செய்து உத்ஸவம் உயர்புபரி சிறக்கும்படி உபகரிக்கவேணுமாய் ப்ரார்த்திக்கிறேன்.

கடாம்பி நரஸிம்ஹ தாஸன்
[ஸ்ரீ. வி. ஸ. ஸபைக் கார்யதர்சி]

𑌶𑍍𑌰𑍀𑌃

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

ஹிந்தி ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

ஸ்ரீ அழகிய சிங்கருடைய நியமநத்தின்பேரில், ஸ்ரீ ஸந்நிதியின் சார்பாக, ஹிந்தி பாஷையில், 'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா' என்னும் பெயருடன் ஒரு பத்ரிகை இந்தச் சைத்ர மாஸம் முதலாக நடத்தப்பட்டு வருகிறது. வடதேசத்தில் நமது ஸித்தாந்த விஷயங்களைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்னும் ச்ரத்தையுள்ள ஆஸ்திகர்கள் பலர் இருந்து வருகிறார்கள். அவர்களுடைய ஆநுகூல்யத்தை உத்தேசித்து இந்தப் பத்ரிகை ஆரம்பிக்கப் பட்டிருக்கிறது. 'யுனைடெட் ப்ராவின்ஸ்' என்று சொல்லப்படும் மாகாணத்தில் இருக்கும் 'பாரில்லி' என்னும் நகரத்தில் ப்ரஸித்தாராக எழுந்தருளியிருக்கும் 'ஆசார்ய பீடம் ஸ்ரீ ராகவாசார்யர்' என்னும் ஸ்வாமி இதற்கு ஸம்பாதகராக அமர்ந்திருக்கிறார். அந்த ஸ்வாமி நல்ல ஜ்ஞாநம் வாய்ந்தவர்; ஆஸ்திகர்; ஸ்ரீ ஸந்நிதி சிஷ்யர்; ஆகையால் எல்லா விதத்திலும் அவர் தகுந்த அதிகாரி. பத்ரிகை ஹிந்தியில் எழுதப்பெற்று ஒவ்வொரு மாஸமும் வெளிவரும். நமது ஸித்தாந்த ஸம்பந்தங்களான பல விஷயங்கள் அதில் விசாரிக்கப்படும். தமிழ் 'ப்ரியை'யில் வெளிவரும் வ்யாஸங்களே அந்தப் பத்ரிகையில் ஹிந்தி பாஷையில் மொழி பெயர்க்கப்பட்டு வெளிப்படுத்தப்படும் என்னும் நியமம் ஒன்றுமில்லை. இதற்கு வார்ஷிக மூல்யம் ரூ. 2—0—0. இந்தப் பத்ரிகையை அபேக்ஷிப்பவர்கள் "ஸ்ரீ ராகவாசார்யர், ஆசார்ய பீடம், கும்பரபுரம், பாரில்லி" என்னும் விலாஸத்துக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

*   *   *   *

ஸ்ரீ மதுராந்தகம் பாடசாலை

ஸ்ரீ மதுராந்தகத்தில் நடத்தப்பட்டுவரும் ஸம்ஸ்க்ருத சாஸ்த்ர பாடசாலை சென்ற ஆறு வர்ஷ காலமாகச் சிறப்புடன் நடைபெற்று வருகின்றதென்பது நமது ஸுஹ்ருத்துக்கள் எல்லாருக்கும் தெரிந்த விஷயம். சற்றேறக்குறைய 80-வித்யார்த்திகள் அதில் வித்யாப்யாஸம் செய்துவருகிறார்கள். வித்வத் ரத்நங்களாகப் பன்னிரண்டு ப்ரவசந கர்த்தாக்கள் அந்தப் பாடசாலையில் ப்ரவசநம் செய்துவருகிறார்கள். அவர்கள் எல்லாரும், 'இது பெரியதொரு கைங்கர்யம்' என்னும் புத்தியுடன் இதில் அந்வயித்திருக்கையிலும், அவர்களுக்கு எவ்வித ச்ரமமுமின்றிக்கே பகவதாராதநாதிகள் நடந்து வருமாறு யதோசிதம் ச்ரம தக்ஷிணையை ஸ்ரீ அழகியசிங்கர் ஸங்கல்பித்து அநுக்ரஹித்து வரும்படி வ்யவஸ்தைகள் செய்யப்பட்டிருக்கின்றன. அவர்களுக்கு

நிராபாதமாக வஸித்து வருவதற்குத் தகுந்த இடம் மதுராந்தகத்தில் துர்லபமாக இருப்பதை உத்தேஶித்து, அவர்களுக்கு உபயோகப்படுமாறு புதிய ஆவஸதங்களையும் ரமணீயமான ஒரு ஸ்தலத்தில், பாடஶாலைக்கு ஸமீபத்திலேயே ஸ்ரீ அழகியசிங்கர் நிர்மாணம் செய்வித்து அநுக்ரஹித்திருக்கிறார். வித்யார்த்திகளுக்கு ஶுசியாகவும் போக்யமாகவும் இருக்குமாறு அந்நஶாலையும் ஒன்று ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. ஒவ்வொரு ஸம்வத்ஸரத்திலும் ஶிரோமணி பரீக்ஷைக்குச் சற்றேறக்குறைய பத்து வித்யார்த்திகளும், ப்ரவேஶ பரீக்ஷைக்கு ஐந்தாறு பெயர்களும் போகிறார்கள். ப்ராயேண எல்லாரும் பரீக்ஷையில் த்ருப்திகரமான நிஷ்பத்தியை அடைந்து வருகிறார்கள். இந்த வர்ஷத்தில் 15-பெயர்கள் ஶிரோமணி பரீக்ஷைக்குப் போனார்கள். அவர்களுள் 14-பெயர்கள் உத்தீர்ணரானார்கள். அவர்களுள் 5-பெயர்கள் இரண்டாவது வகுப்பில் தேறினதாகத் தெரிகிறது. இது நமக்கு ஒரு ஸந்தோஷத்தை ஜநிப்பிக்கின்றது.

இம்மாதிரி நமது சிறுவர்களுக்கு ஜ்ஞாநத்தை அபிவ்ருத்தி செய்வது பெரியதொரு உபகாரமே. ஆனால், ஜ்ஞாநம்போல மற்றொரு விஷயமும் பூர்ணமான ச்ரேயஸ்ஸுக்கு அவச்யம் அபேக்ஷிதம். அந்த விஷயம் அநாதரிக்கப்பட்டு, அது விபரீதமான மார்க்கத்தில் சென்றால், ஜ்ஞாநம் மாத்ரம் நம்மைக் காப்பாற்றும் என்று சொல்ல முடியாது. அது என்னவென்றால் ஆத்மகுண வர்க்கமே. ஸர்வபூத ஸௌஹார்த்தம், ஆர்ஜவம், காமக்ரோதாதிகளுக்கு வஶப்படாமலிருக்கை, இவை முதலிய குணங்களே. இவைகளே பகவத் ஸாயுஜ்யத்தை ஸம்பாதித்துக் கொடுக்கக் கூடியவை.

“யஷ்ய கெவலும் ஜ்ஞாநாவி ஷ்ரஸி:, ந த்ஸ்ய ஸாத்விகத்வாதயொ மூணாः, ந ஸ ப்ரஹ்மண ஸாயுஜ்யத் ஶாப்னொதி”

ஆனால் அந்த ஆத்மகுண பூர்த்தி ப்ராயேண ப்ராக் ஜந்ம வாஸநையைச் சார்ந்தது. அநாதி காலமாக ஒருவன் குமார்க்கத்திலேயே சென்று அதர்மத்தையே அநுஷ்டித்து வந்திருக்கும் பக்ஷத்தில், அவனை நல்ல மார்க்கத்தில் திருப்ப முயல்வது அரண்ய ருதிதமாகவே முடியும். இருந்தபோதிலும் இரண்டொரு உபாயங்களால் அவனையும் கொஞ்சம் வஶீகரிக்கலாம். அந்த உபாயங்களுள் ப்ரதாநமானது ஸாது ஜந ஸம்பர்க்கம். ‘ஸம்ஸர்கஜா தோஷகுணா பவந்தி’ [நல்ல நடவடிக்கையோ துஷ்டமான நடவடிக்கையோ எல்லாம் சேர்க்கையால் உண்டாகின்றது] என்று பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள். பாடசாலையில் நியமிக்கப்பட்டுள்ள ப்ரவசந கர்த்தாக்களெல்லாரும் ஸாத்விகோத்தமர்களாகவும், இதர கைங்கர்யபரர்களும் பாடசாலையின் நன்மையையே பரம பலமாகப் பாவிக்கிறவர்களாகவும், பாடசாலையைச் சுற்றி வஸிக்கும் ஜநங்களுள் காமக்ரோதாதிகளுக்குப் பரவசமாக இருக்கும் தோஷ துஷ்டர்களுடன் அதிக ஸம்பர்க்கம் இராமலும் இருந்தால், ஜந்மாந்தர வாஸநையால் தூஷிதமான சித்தத்தையுடைய வ்யக்திகளும் ஸாதுக்களாக மாறிவிடலாம். ஆனால், இந்தக் கலி காலத்தில் அம்மாதிரியான ஜந ஸமூஹம் கிடைப்பது அரிது. இப்பொழுது இருக்கும் ஸ்திதியைச் சற்று ஊன்றிப் பார்த்தால் ‘நாம் மநோரதிக்கும்

கார்த்தயுக தர்ம மெங்கே? நாம் எங்கே?' என்று மநஸ் பீதியை அடைகிறது. சாஸ்த்ர ஜ்ஞாநத்தைப் பூர்ணமாக ஸம்பாதித்துக்கொண்டு உதாரமான சித்த சுத்தி யின்றிக்கே இருக்கும் ஜநங்களைப் பார்க்கும்பொழுது,

" காம் அ ந த்ருஷ்ட்வா ஹஸா ந நிவ-ணா காஶ ந நாத்வா ஹ்ருஸிவ மூடநா "

[உத்தமமான ரூபத்தையுடைய ஸ்த்ரீ பர்த்தா வின்றிக்கே இருப்பதைப் பார்ப்பதுபோல] மநஸ் உத்வேகத்தை அடைகின்றது. இம்மாதிரியான துஸ்ஸ்திதியை அணுகவொட்டாமல் நமது பாடசாலை நடத்தப்பட்டுவருகின்றதே நமக்கு ஸந்தோஷத்தை ஜநிப்பிக்கின்றது.

நவரத்ந பரம்பரை

'தேஶிக தர்ஶந ரத்நதீபம்' என்னும் பிருது பெற்றிருக்கும் ஸ்ரீ. உப. வி. வி. ஸ்ரீநிவாஸையங்கார் ஸ்வாமியின் உத்ஸாஹ மடியாக இப்பொழுது இரண்டு க்ரந்தங்கள் தமிழ் உரையுடன் வெளிவந்திருக்கின்றன. அவையாவன: (1) ஸ்ரீ தஶாவதார ஸ்தோத்ரம். (2) ஸ்ரீ மும்மணிக் கோவை. இவ்விரண்டு க்ரந்தங்களும் நம் ஸ்ரீ தேஶிகனுடைய க்ருதிகள். இவைகளுள் முதல் க்ரந்தமாகிற தஶாவதார ஸ்தோத்ரம் ஸம்ஸ்க்ருத பாஷையிலும், இரண்டாவது க்ரந்தமாகிற மும்மணிக்கோவை தமிழ்ப் பாஷையிலும் இயற்றப்பட்டவை. தஶாவதார ஸ்தோத்ரமானது எம்பெருமானுடைய ப்ரஸித்தாவதாரங்களாகிற மத்ஸ்ய கூர்மாத்யவதாரங்களின் மஹிமையைப் பற்றிப் பேசுகின்றன. மும்மணிக் கோவை என்பது திருவஹீந்த்ரபுரம் எம்பெருமானாகிற அடியவர்க்கு மெய்யனாகிய ஸ்ரீ தைவநாயகனைப் பற்றிய ஸ்தோத்ரம். இதில் ஸ்ரீ தேஶிகன், எம்பெருமானுடைய கல்யாணகுணங்களையும் அவனுடைய திவ்ய சேஷ்டிதங்களையும் வர்ணிப்பதுடன், நமது ஸித்தாந்தத்தின் ரஹஸ்யார்த்தங்களையும் வெளியிட்டிருக்கிறார். பகவானுடன் பிராட்டியின் பிரிவில்லாச் சேர்த்தியும், எம்பெருமானும் பிராட்டியும் இருவரும் சேர்ந்தே ஜகத் வ்யாபாரத்தை நடத்துகிறார்கள் என்னும் விஷயமும், இன்னும் தத்வ ஹித புருஷார்த்தங்களுடன் ஸம்பத்தமான அநேக ரஹஸ்யங்களும், ஸூக்ஷ்மமாகக் குறிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் இது பூர்ணமான க்ரந்த மன்று. ஒரு பாகமே அகப்பட்டிருக்கின்றது. பெரும்பாகம் லுப்தமாகி விட்டதாம். இம்மாதிரியான அநேக க்ரந்தங்கள் லோபம் அடைந்து நமக்குத் துர்லபமாகப் போயிருக்கின்றன. அதை நம்முடைய தௌர்ப்பாக்ய பலமென்றே நாம் நினைக்கிறோம்.

இந்த இரண்டு வெளியீடுகளுக்கும் ஸ்ரீமான் வி. வி. ஸ்ரீநிவாஸையங்கார் ஒரு முகவுரை எழுதியிருக்கிறார். அது மிகவும் சித்தரஞ்ஜகமாக எழுதப்பட்டிருக்கின்றது. சொல்லப்படும் விஷயம் ஸாமாந்யமாக இருந்தாலும், அதைச் சொல்லும் ப்ரகாரத்தின் வைசித்ரியால் அது மிகவும் ரஸவத்தாக மாறுவது உண்டன்றோ? ஸதாசார்ய கடாக்ஷ மஹிமையாகவோ பகவத் ப்ரஸாத விசேஷத்தின் பலமாகவோ, ஸ்ரீ. ஸ்ரீநிவாஸையங்காருக்கு இந்த ஸாமர்த்ய விசேஷம் கிடைத்திருக்கிறது. பிறருக்குத் தோன்றாத ச்லாக்யங்களான தோற்றங்கள் அவருடைய புத்தியில் ஆவிர்ப்பவிப்பதை நாம் பார்த்திருக்கிறோம்.

'நவரத்ந பரம்பரை' என்று பெயரிட்டு ஸ்ரீ தேசிகனுடைய திவ்ய ஸூக்திகளை ஒரு புதிய புஸ்தகமாக அச்சுப் பதிப்பித்து, அவைகளின் ரஸத்தைத் தமக்குத் தோன்றும் ஒரு புதிய ரீதியில் தாம் அநுபவிப்பதுடன், மற்றைப் பாவுகர்களையும் அநுபவிப்பிக்கவேண்டும் என்னும் எண்ணம் வேறு எந்த வ்யக்திக்குத் தோன்றும்? ஸ்ரீ ராமாநுஜ தயாபாத்ர மஹோத்ஸவமென்றும், தயா சதக மஹோத்ஸவமென்றும், ஸாராவளி மஹோத்ஸவமென்றும், இம்மாதிரி அநேக உத்ஸவ விசேஷங்களை நூதநமான பரிபாடியில் அவர் அடிக்கடி நடத்தி வைப்பதே அந்யாத்ருசமான அவருடைய கல்பநா சக்திக்கு ப்ரத்யக்ஷ நிதர்சநமாகும். இவரை ஒரு புண்ய புருஷனென்றே நாம் சொல்லத் துணிகின்றோம். தேசிக தர்சநத்தில் இவருக்கு இருக்கும் ச்ரத்தை மேன்மேலும் அபிவ்ருத்தமாகி, ஸ்ரீ வைஷ்ணவ ஸமூஹத்திற்கு இம்மாதிரியான உபகாரத்தை இவர் அநவரதம் செய்துவரும்படி ஸ்ரீ சரண்யன் அநுக்ரஹிக்கவேணுமென்று நாம் ஹார்த்தமாக ப்ரார்த்திக்கிறோம்.

* * * *

ஸ்ரீ வேதாந்த ரக்ஷாமணி விமர்சம்

'ஸ்ரீ வேதாந்த ரக்ஷாமணி விமர்சம்' என்னும் பெயருடன் ஸ்ரீ. உப. அன்பில் வி. கோபாலாசார்ய ஸ்வாமி ஒரு வேதாந்த க்ரந்தத்தை வெளியிட்டிருக்கிறார். இது, மஹா மஹோபாத்யாய ப்ரஹ்ம ஸ்ரீ அநந்த க்ருஷ்ண சாஸ்த்ரிகளால் வெளியிடப்பட்டுள்ள (1) வேதாந்த ரக்ஷாமணி (2) ப்ரச்நோத்தர ஸஹஸ்ரீ (3) ப்ரதீபம் என்னும் க்ரந்தங்களுக்குக் கண்டநமாக எழுதப்பட்டது. ஸ்ரீ அநந்த க்ருஷ்ண சாஸ்த்ரிகள், தமது க்ரந்தங்களில் எவ்வித ஆக்ரஹமுமிராமல் கேவலம் ஸ்வஸித்தாந்தத்தின் மஹிமையைப் பற்றி மாத்ரம் பேசியிருக்கும் பக்ஷத்தில், இந்த விமர்சம் வெளிவந்திருக்கவே மாட்டாது. ஸ்ரீ சாஸ்த்ரிகள், பகவத் ராமாநுஜாசார்யரின் ஸித்தாந்தத்தைத் தூஷிப்பதற்காகவே கீழ்க் கூறப்பட்டுள்ள க்ரந்தங்களை இயற்றியிருக்கிறபடியால், அந்தத் தூஷணங்களிலுள்ள தோஷங்களை நிஷ்பக்ஷபாதிகளான வித்வஜ்ஜநங்கள் அறியுமாறு ஒரு கண்டந க்ரந்தம் எழுதவேண்டுமென்று எண்ணி ஸ்ரீ கோபாலாசார்ய ஸ்வாமி இந்த விஷயத்தில் ப்ரவர்த்தித்தார். இந்த விமர்சத்தின் முதல் பாகம், 1942-ம் வர்ஷத்தில் மூர்ஷ்டாபாத் மஹந்து மஹாராஜரால் ப்ரசுரிக்கப்பட்டு வெளிவந்தது. இரண்டாவது பாகமாகிற இந்த வெளியீடு, ஸ்ரீ ப்ரஹ்ம ஸூத்ரம் ஆநந்தமயாதிகரணத்தின் பாஷ்யத்தை விஷயமாக உடையது. இது, முதல் பாகம் போல ஸம்ஸ்க்ருத பாஷையிலேயே எழுதப்பட்டிருக்கிறது. இதில் முதல் 50 பக்கங்களில் ஸ்ரீ சங்கராசார்யருடைய ஸித்தாந்தம் விவரிக்கப்பட்டு, அடுத்த 90 பக்கங்களில் தைத்திரீய உபநிஷத்தின் அர்த்தம் ஸ்ரீபகவத் பாதர்கள் விவரித்திருக்கும் ப்ரகாரம் உபபாதிக்கப்பட்டிருக்கிறது. அடுத்த 10 பக்கங்களில், ஆநந்தமயாதிகரண ஸம்பந்தமாகச் சில ப்ரச்நங்களும் அவைகளின் ஸமாதாநங்களும் விவரிக்கப்பெற்று, பாக்கி க்ரந்தத்தால் ஸ்ரீ அதிகரணஸாராவளியில் இருக்கும் இந்த அதிகரண விஷயங்களான ச்லோகங்களும், குணோபஸம்ஹார பாதத்தில் வரும் ஆநந்தாத்யதிகரண பாஷ்யமும் உபாதிக்கப்பட்டிருக்கின்றன. இந்த

ஆநந்யாத்யதிகாணம் ஆநந்த மயமான வஸ்து ஸாக்ஷாத் பரப்ரஹ்மமே என்பதை வற்புறுத்துகிறபடியால், அதை இவ்விடத்தில் ப்ரஸ்தாவிப்பது உசித மென்று அதையும் விவரித்திருக்கிறார்.

'இவ்விடத்தில் விவாத விஷயமென்ன? எந்த அம்ஶத்தில் இரண்டு ஆசார்யர்களுக்கும் விப்ரதிபத்தி ஏற்பட்டிருக்கிறது?' என்பதை விசாரிக்கப் புகுவது ப்ராப்தம். ஆனால் அதைத் தீர்க்கமாக விசாரிக்கப் புகுந்தால், அது ஒரு பெரிய விசாரமாகு மாதலால், அதை ஸங்க்ரஹமாக ஸூசிப்பித்துவிட்டு, அதனுடன் விரதராகிறோம். இந்த உபநிஷத்தில் ப்ரஸ்தாவிக்கப்படும் ஆநந்தமயம் என்னும் வஸ்து பரப்ரஹ்மமா இல்லையா என்பதுதான் விசாரம். 'இல்லை' என்பது ஸ்ரீ ஶங்கராசார்யருடைய பக்ஷம்; 'ஓம்' என்பது பகவத் ராமாநுஜருடைய ஸித்தாந்தம். 'ஆநந்தமய ஶப்தம் ப்ரஹ்மத்தைக் குறிக்கவில்லை; ஆநந்தமய வாக்யத்தில் 'புச்ச ப்ரதிஷ்டை' என்று பேசப்படும் வஸ்துவே பரப்ரஹ்மமாகும்' என்பது ஸ்ரீ ஶங்கராசார்யருடைய கொள்கை. ஸ்ரீ ஶங்கர பாஷ்யத்தை ஊன்றிப் பார்த்தால், அவர் முதலில் த்ரமிடாசார்யர் பரஹ்மாநந்தி முதலான பூர்வாசார்யர்களின் அபிப்ராயமாகிற 'ஆநந்தமயம் ப்ரஹ்மமே' என்பதை அநுஸரித்து விவரித்துவிட்டு, பிறகு, அதற்கு விருத்தமாக 'புச்ச ப்ரதிஷ்டையே ப்ரஹ்மம்' என்னும் தமது அபிப்ராயத்தை வெளியிடுவதாகத் தெரியவரும். இந்த விவரணம் ஸூத்ராக்ஷரத்திற்கு அதிமாத்ரம் விருத்தமே. இவ்வாறு விவரிப்பதில் ஸ்ரீ சங்கராசார்யர் மிக்க க்லிஷ்ட கல்பனையைச் செய்கிறார் என்பதை ஸ்ரீ கோபாலாசார்யர் தெளிவாகவும் விஸ்தாரமாகவும் எடுத்துக் காட்டியிருக்கிறார். ஸ்ரீ சங்கராசார்யர், தாம் முதலில் பூர்வாசார்யர்களுடைய மதத்தை அநுஸரித்து எழுதிவிட்டு, பிறகு அதற்கு விருத்தமாக அர்த்த விவரணம் செய்வதற்கு ஏழு ஹேதுக்களைச் சொல்லுகிறார். அந்த ஹேதுக்க ளெல்லாம் தோஷ துஷ்டங்க ளென்பது ஸ்ரீ கோபாலாசார்யருடைய உபபாதநத்திலிருந்து ஏற்படுகிறது. விரிவுக்கு அஞ்சி இதனுடன் விரதராகிறோம்.

ஸ்ரீ வேதாந்த ரக்ஷாமணி விமர்ஶ க்ரந்தத்தின் க்ரயம் ரூ. **5—0—0.** இதனை "ஸ்ரீ. ஏ. வி. கோபாலாசார்யர், அட்வொகேட், திருச்சிராப்பள்ளி கண்டோன்மெண்ட்" என்னும் விலாஸத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

*　*　*　*

ஸ்ரீ மதுராந்தகம் பாடசாலையில் புதிய மாணவர்களைச் சேர்ப்பது பற்றிய ஓர் அறிக்கை.

வருகிற வர்ஷத்திற்கு ஸ்ரீ மதுராந்தகம் பாடசாலையில் புதிய வித்யார்த்திகளைப் பரீக்ஷித்துச் சேர்த்துக்கொள்ளும் தினம், நிகழும் ஜூன்மீ 27வ ஞாயிற்றுக்கிழமை யென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. ஷ பாடசாலையில் சேர்வதற்கு மனுச் செய்துகொண்டிருக்கும் வித்யார்த்திகள் யாவரும் அன்று மத்யாங்ஹம் 12-மணிக்கு அவ்விடத்திற்குத் தயாராக வரவேண்டும்.

விது:—[மிகவும் கவலையுடன் தனக்குள்] இது மிகவும் ஆச்சர்யம்! வேறு விஷயத்தில் மனத்தைச் செலுத்தலாமென்று இவ்விடம் அழைத்துவந்தேன். அது விலங்கை விட்டுத் தொழுவில் மாட்டிக்கொண்டதுபோல் ஆயிற்று. ஆகையால் இன்னும் ஏதாகிலும் காரணத்தைக் காட்டி அவருடைய தலைமண்டிய பேராவலைத் தணிக்கப் பார்க்கிறேன். [ப்ரகாசமாக] தேவா! இப்பக்கம் சற்றுக் கடாக்ஷிக்கவேண்டும். இது கருடாசலச் சிகரத்தினுடைய ரமணீய ப்ரதேசம்.

பகவான்:—நண்பா! கண்ணாரக் கண்டேன். அதிக பழக்கத்தினால் எது எதுதான் நேரிடாது? அதோ பார் ஸித்தர்கள், கந்தர்வர்கள், இவர்களுடைய பாலகிகள் விளையாடும் காட்சியை. இவர்கள் இயற்கையில் கட்டழகிகள். ஆனால் அறிவு மாத்ரம் சற்றுக் குறைவுதான். இவ்வநத்தி லிருக்கும் வேடுவத் தலைவர்களின் புதல்வர்களைக் கண்டு அவர்களுடன் தோழமை கொண்டனர். அச்சிறுவர்கள் புரியும் வேட்டைத் தொழிலையே சிறந்ததாக எண்ணி மோஹமுற்றனர். தங்களுக்கு மானமே முக்ய கலை என்பதை அறவே மறந்தனர். வேட்டையாட வலை துப்பாக்கி முதலிய ஸாமான்கள் வேண்டு மல்லவா? தங்கள் அழகிய வீணையிலிருக்கும் தந்திகளை அக்கு வேறு ஆணி வேறாகப் பிய்த் தறுத்து ம்ருக பக்ஷிகளைப் பிடிக்க வலைபோல் பின்னியிருக்கின்றனர். வீணையின் நீண்ட தண்டை, அவைகளைக் குறி பார்த்துச் சுடத் துப்பாக்கியாகச் செய்துகொண்டனர். வெகுகாலமாய் இவ்வேடுவப் பையன்களுடன் சேர்ந்துகொண்டு, வேட்டையாடுவதிலேயே ஆர்வ முடையவர்களாய்க் காலத்தைக் கழிக்கின்றனர்.

விது:—ப்ரியே! ஆம்; அதிலென்ன ஸந்தேஹம்? தோஷமோ குணமோ ஸஹவாஸத்தால் அல்லவோ நேரிடுகின்றன. ஸ்வாமி! இதோ இப்பக்கம் வேத பர்வதத்தின் தெற்குப் பாகம். அதன் ஸமீபத்தில் விளங்கும் உபவநங்கள் எவ்வளவு ரமணீயம்! நிர்மலம்; பாவநம். அப்ரதேசங்களைத் தேவரீர் சற்றுக் கடாக்ஷித்துப் பின்னும் பரம பாவநமாகச் செய்தருள வேண்டுகிறேன்.

பகவான்:–[அவைகளைக் கூர்ந்து கவனித்துப் பழைய ஞாபகம் வந்தவர் போல] ஆம்; இவைகள் அவச்யம் பார்க்கத்தக்க பரம பாவந ஸ்தலமே. இதோ விளங்கும் இப்பர்ணசாலையானது பராஸர முனிவருடையது. இதோ அதன் பக்கத்தில் விளங்கும் அழகிய ஆச்ரமம் வஸிஷ்டருடையது. இதோ எதிரில் விளங்குவது பரம பாகவதோத்தமனான ப்ரஹலாதாழ்வான் தபோவநம். அதோ சற்றுத் தூரத்தில் விளங்குவது புண்ய சீலனாகிய புண்டரீகனுடைய சிறுகுடில். இதோ பார்த்தாயா? இப்பக்கம் வெகு அழகாய் விளங்கும் ஆச்ரமம் ப்ரஹ்ம புத்ரராகிய நாரத முனிவருடையது. இதோ இந்தக் கோடியில் விளங்குவது வ்யாஸ பகவானுடைய ஆச்ரமம். முற்காலத்திய பாகவதோத்தமர்களின் கூட்டங்களால் அலங்கரிக்கப்பட்டிருக்கும் பர்ணசாலைகளுடன் விளங்குவதால், இவ்வநம் மிகவும் பாவந முடையது.

விதூ:—ஆஹா! என்ன சொல்வேன் இப்பர்வத ராஜனுடைய மஹிமையை. இதன் ஸமீபத்தில் மஹாமுனிவர்கள் தவம் செய்து யோகதசையில் அப்பெருமானை அநுபவிக்கும் ஆநந்தத்தை அடைகின்றன ரல்லவா?

பகவான்:— [மற்ருெரு பக்கம் திரும்பி] நண்பா! இதோ நமது முன்னிலையில் ஓடும் பவநாஶிநீ என்னும் நதியைப் பார். இது பாப ராஶிகளைப் பஸ்பமாகச் செய்யும் மஹிமை வாய்ந்தது. தெளிந்து மதுரம் மிக்க ஜலத்தின் சுவை கூறத் தரமன்று. ஸ்வபாவத்திலேயே அழகு வாய்ந்தது. ப்ரவாஹமோ நடுவில் அரித்து ஓடுகிறது. அதில் அநேக ஜனங்கள் குடைந்து நீராடுகின்றனர். மேலும் தேவர்ஷி பக்ஷிகளின் கூட்டங்கள் இப்பாவநமாகிய நதியில் நித்யம் நீராடித் தங்கள் நியமங்களை அநுஷ்டிக்கின்றனர். [சற்றுத் தாபம் தணிந்தவராய்] ஆஹா! என்ன செய்வேன்! நான் படும் பாட்டைக் கூறுகிறேன்; சற்றுச் செவி சாய்ப்பாய். மா, நவமாலிகை, கமலம், கருநெய்தல், அசோகம் இம்மலர்களிலிருந்து உண்டான மகரந்த ரஸங்களினுல் வ்ருத்தி செய்யப்பட்ட பரிமளம் ஶைத்யம் இவைகள் என்ன, பவநாஶிநீ நதிக் கரையில் வீசும் மந்தமாருத மென்ன, இவைகள் ஏககாலத்தில் அதிசீக்ரம் என்னுடைய மனத்தை மந்மதனிடத்திலிருந்து மிகவும் பயத்தையுடையதாகச் செய்கின்றன. [பிறகு சற்றுத் தைர்யம் வந்தவர்போல்] நான் என்ன இவனுக்கு அடங்கி நடப்பவன் என்று எண்ணினுன்போலும்! அடா அயோக்யா! நீதியற்றவனே! சீக்ரம் என்னை விட்டுத் தூரச் செல். ஓ மாருத! உன் வீர்யம் என்னிடம் செல்லாது. இதோ பார்; என்னுடைய படுக்கையாகிய ஆதிசேஷன் மிக்க பசியுடன் துடிக்கிறுன். உன்னை அவன் இக்ஷணமே சற்றும் மிஞ்சாமல் பாநம் செய்துவிடுவான். பத்ரம்! அவன் காற்றைப் பருகுபவன் என்பதை நீ அறியாய்போலும்! இனி என் கண்முன் நில்லாதே.

விதூ:— [நினைவு கூர்ந்தவனுய்] ஆம்; எவ்வளவு போதாகிவிட்டது. உங்கள் விரஹ ஸம்ப்ரமத்தில் என்பாடு திண்டாட்டம். தங்களுடைய ஆதிசேஷனைப்போல நானும் பசியால் வருந்துகிறேன். என்னையும் சற்றுக் கவனிக்கவேண்டும்.

பக:— [புன்சிரிப்புடன்] தோழனே! எவரவர்களுக்கு எதெதில் ஆசையோ அததிலேயே அன்ருே அவரவர் மனம் செல்லும். உனக்கு எப்பொழுது உணவு கிடைக்குமென்று எண்ண மிருக்கிறது. அதிலேயே உனது பேராவல் செல்கிறது. எனக்கோவென்ருல், இவ்வேதகிரியின் ஒவ்வொரு மலைச் சிகரங்களிலும் இப்பவநாஶிநியின் குளிர்ந்த திவலைகள் வீசும் ஒவ்வொரு லதா க்ருஹங்களிலும் ஒவ்வொரு குஹைகளிலும் தளிர்மயமாய் இருக்கும்படியான படுக்கைகளில் அப்பெண்மணியானவள் என்னை அடைந்து ரமிப்பளா என்ற எண்ணம். நானும் அவளை யடைந்து ஸுகிப்பேனு! [மந்மத தாபத்தினுல் தடுமாற்ற மடைந்தவர்போல் அபிநயிக்கிருர்.]

விதூ:—[தனக்குள் மிகவும் க்லேசத்துடன்] அடாடா! இது என்ன கஷ்டம்! பகவான் வெகுதூரம் நடந்ததினுலும் மந்மதனுடைய தாபத்தினுலும்

மிகவும் களைப்பை யடைந்தார். நீண்ட பெருமூச்சு வருகிறது. மேடு பள்ள மற்ற ஸமமான மார்க்கத்திலும் கூட அடிக்கடி கால் இடறுகிறது. ஸ்ரீராமா வதாரத்தில் மிதிலைச் செல்வி பிரிந்து வருந்தியதைப்போ லல்லவோ இருக்கிறது இப்பொழுது இவருடைய நிலைமை! [வெளிப்படையாய்] தேவா! இதோ தென் படும் மாதவிப் பந்தலில் அமைக்கப்பட்டிருக்கும் ஸலவைக்கல் மேடைமேல் சற்றுநேரம் உட்கார்ந்து, மலையருவிகளின் குளிர்ந்த திவலைகள் பதிந்து வரும் காற்றினால் கரடுமுரடான ப்ரதேசங்களில் நடந்துவந்த ஆயாஸம் தீருமளவும் இளைப்பாறிச் செல்வோம்.

பகவான்:—அவ்விதமே யாகட்டும்; [ஸலவைக் கல் மேடையில் உட்காரு கிறார்] [சுற்றுமுற்றிலும் உற்று நோக்கி] அப்பா! எங்குச் சென்றாலும் என் நிழல் என்னைப் பின் தொடர்கிறது. விரஹ தாபத்தை மேன்மேலும் வ்ருத்தி யடையுமாறு செய்கிறது இவ்வநம். ஒவ்வொரு வநத்திலும் கூட்டம் கூட்ட மான வண்டுகள். ஒவ்வொரு வண்டும் தேனைப் பருகிய மதத்தினால் செய்யும் ரீங்கார த்வநி. அத்வநியில் என்னுடைய எண்ணம் செல்கின்றது. உடனே மந்மதன் என்னுள்ளத்தில் குடி புகுகிறான். எந்தெந்த இடங்களில் என் த்ருஷ்டி விழுகிறதோ அவ்வவ்விடங்களெல்லாம் என்னுடைய ப்ரியையைக் காண்கிறேன். இது என்ன! மந்மதன் என்னிடம் கொண்ட இரக்கத்தினால் மூவுலகங்களையும் அப்பெண்மணியின் மயமாகவே செய்துவிட்டான்போலும்! [மநோரதத்தினால் அவளை அநுபவிப்பதுபோல் புலம்புகிறார்.] 'ஓ பெண்மணியே! என்னை உன் தாஸனாக எப்பொழுது செய்துகொள்வாய்? உனது பாத கமலங் களை என் மடிமேல் வைத்துச் சற்றுப் பிடி என்று ஆஜ்ஞாபிப்பது எப்போது? தாம்பூலம் மடித்துக்கொடு என்று என் கையிலிருந்து வாங்கிச் சுவைப்பது எந்நாள்? என்னை அணைத்து ஆலிங்கநம் செய்துகொள்ளும் பாக்யம் எப்பொழுது கிட்டும்? இப்பொழுது என்னை உன் பரிஜநமாகச் செய்துகொள்ளும் அவகாஶம் கிடைக்குமா? கிடைக்காதா?'

விதூ:— [ஹி! ஹி! என்று சிரித்து] இது என்ன பகவானின் செய்கை? தன் மநோபாவத்தினால் தனது ப்ரியை எதிரிலிருப்பதாக எண்ணி அவளை ஸமா தாநப்படுத்துவதின்பொருட்டு ப்ரவர்த்திக்கிறார்.

பக:— [கண்களை மூடிக்கொண்டு] ஓ! கிராத ராஜகுமாரியே! சற் றும் தயவற்றவளே! ஏன் என்னிடம் காரண மில்லாமல் சினங் கொள்ளுகிறாய்? நான் என்ன அபராதம் செய்தேன்? [சற்று எழுந்துபோய் மறுபடியும் உட்காரு கிறார்.] இல்லையேல் – ஆம்; இவ்வித மிருக்கலாம். நீ ஒரு பெண்யானை; நிச்ச யம். யானைக்குள்ள அடையாளங்க ளெல்லாம் உன்னிடமும் காணப்படுகின் றன. யானையின் நடையானது உன் கண்களிலும், அதனுடைய மஸ்தகத்தின் தன்மை உன் ஸ்தநங்களிலும், யானையின் இரு தந்தங்களின் ப்ரகாசம் உன் இரு கபோலங்களிலும், அதன் தும்பிக்கையின் உவமை உன் தொடைகளிலும் தோன்றுகின்றன. ஆஹா! ஆச்சர்யம்! இப்பொழுது தெரிந்தது. 'ஹரி' யென் னும் எனது பெயரைக் கேட்டு, என்னை ஸிம்ஹம் என்று நினைத்துப் பயந்து

நடுங்கிச் செல்கிருய்போலும். ப்ரியே! பயப்படவேண்டாம், [அவளைத் தேடு வதின் பொருட்டு எழுந்திருக்கிருர்.]

விதூ:-- தேவா! இப்பொழுது தாங்கள் ஸாமாந்ய மனிதர்களைப்போல மனத்தைப் பறிகொடுத்துத் தவிப்பது தகாது. சற்றுப் பொறுமையைக் கடைப் பிடியுங்கள். ஆயிரந் தோள்களைத் துணித்துப் பாணனை வென்ற தேவரீருக்கு இப்பஞ்சை பஞ்சபாணன் ஒரு பொருட்டா ?

பகவான்:-- [ததும்பும் உணர்ச்சியுடன்] நான் என்ன செய்வது? இப் பொழுது என் நிலைமையைத் தெரிந்துகொள். அன்று அப்பெண்ணின் மாநத் தைச் செவியுற்றபோதே என் காது அதிலேயே லயித்தது. அவள் பாடிய ராகத்தில் எனது ஆசை நிலைநின்றது. ச்ருதி லயத்தில் என்னுடைய மனம் லயித்தது. மேலும் அவள் என்னுடைய மனமாகிற மானைப் பிடித்த ஆச்சர் யத்தை எவ்விதம் புகல்வேன்! ஸரளமாகிய கமகத்தின் சேர்க்கையையுடைய அழகிய ஸங்கீதமாகிற கட்டினுல் அம்மானின் நடை தளர்ந்து, அறிவு அழியு மாறு செய்தாள். உடனே வலையை வீசி அதைப் பிடித்துத் தன் ஸமீபத்திற்கு இழுத்துக்கொண்டாள். இவ்வளவேயோ? தன்னுடன் கூட எடுத்துக் கொண்டே சென்றுவிட்டாள்.

விதூ:-- இதிலென்ன ஆச்சர்யம்? அவ்வேடுவப் பெண் ஸ்வஜாதிக்குத் தக்க செய்கையே செய்தாள்.

பகவான்:-- இப்பொழுது என்ன செய்வது? எனது ஆத்மா தரிப்ப தற்கு என்ன உபாயம்? இனி உயிருடன் வாழ ஸாத்ய மில்லை. எவ்வள்வு தடுத்தாலும் என் உயிர் நில்லாதுபோல் இருக்கிறது.

விதூ:—[தனக்குள்] மந்மதனுடைய பித்தம் தலைக்கேறியதால் ஸ்வாமி ஸகலமும் மறந்தார் போலும். [வெளிப்படையாய்] தேவா! இது என்ன தங்கள் மறதி? நேற்றை தினம் மாயாமயனை ஸம்பர பட்டணத்திற்கு அனுப்பியது நினைவில்லைபோலும். இப்பொழுது அவன் தங்களுடைய ப்ரிய நாயகியை அந்தப்புரத்திற்கு வெளியிலிருக்கும் உத்யாநவநத்திற்கு அழைத்துவருவான். ஆகையால் நாம் அவ்விடம் செல்வோம். அதற்காகத் தாங்கள் யோகமாயா சக்தியைக் கைப்பிடிக்க வேண்டும்.

பகவான்:— [உடனே உத்ஸாகமும் நம்பிக்கையும் அடைந்தவராய்] நண்பா! நீயே ஸமய ஸஞ்ஜீவி. நன்ருகக் கூறி ஞாபகப் படுத்தினுய். அவ் விதமே ஆகட்டும். நீ மனவுறுதியுடன் கண்களை நன்ருக மூடிக்கொள். ஸ்வயம்ப்ரபை வாநர வீரர்களைக் கண்ணைக் கட்டிக் கடற்கரைக்குக் கொண்டு போய்ச் சேர்த்ததுபோல், உன்னை வேடுவப் பட்டணத்திலிருக்கும் உத்யாந வநத்தில் கொண்டுபோய்ச் சேர்க்கிறேன்.

[இவ்விதம் யோகமாயா வித்தை செய்வதாய் அபிநயிக்கிருர். அடுத்த க்ஷணம் விதூஷகன் கண்களைத் திறக்கிருன்.]

விதூ:—ஆஹா! என்ன ஆச்சர்யம்! என்ன ஆச்சர்யம்! தேவா! தங்கள் மாயாபலத்தினல் ஒரு க்ஷணத்தில் கருடாசலத்திலிருந்து வேடுவப் பட்டணத்தின் வடக்குப் பாகத்திலிருக்கும் உத்யாநவநத்திற் கல்லவா வந்து சேர்ந்துவிட்டோம்.

பகவான்:—[முன்பக்கம் பார்த்து] தோழா! இதோ பார் புதிதாக வந்த வஸந்த லக்ஷ்மியின் சோபையை. எப்பொழுதும் அழகாய்ச் சித்தரிக்கப் பட்டிருக்கும் மநோஹரமான இவ்வுத்யாநவநத்தின் அழகே அழகு.

விதூ:—தேவா! உண்மை உரைக்கப்பட்டது. தங்களால் இப்பொழுது, தான் சித்திரை மாதம் பிறந்தது. ஆகையினலேயே உத்தம பெண்கள் தங்கள் பாதத்தால் உதைப்பது, ஆலிங்கநம் செய்துகொள்வது, தூபதீபம் போடுவது முதலிய க்ருஷிகள் இல்லாமலே அடர்ந்த தளிர்களும் புஷ்பங்களும் பழங் களும் நிறைந்துள்ளன இம்மரங்கள்.

பகவான்:—[நான்கு பக்கமும் உற்று நோக்கி, ஏதோ நினைவு வந்தவ ராய், சற்று அஸூயையுடன்] தோழா! என்னே என் துரத்ருஷ்டம்! இம் மரங்கள் செய்த புண்யம் நான் செய்யவில்லையே! அப்பெண்கொடி இம் மருதாணி மரத்தை, புஷ்பிப்பதின்பொருட்டுத் தழுவிக்கொண்டிருக்கிருள். அது எவ்வளவு பாக்யம் செய்ததோ! இதோ தென்படும் ப்ரியாளு என்னும் செடியின்கீழ், அது மலர்வதின்பொருட்டு ஶரணம் செய்திருக்கிருள். என்னு டையதைக்காட்டிலும் அதன் ஜந்மம் சிறந்ததல்லவா? இதோ எதிர்ப்பக்கம் தென்படும் திலக வ்ருக்ஷத்தின்பேரில் தன் கடைக்கண்ணின் அலைகளை வீசியிருக் கிருள். அதுவன்றே இப்பொழுது தங்யமுள்ள தாயிற்று! மாகந்தம் என்னும் இச்செடியைத் தன்னுடைய கரகமலங்களினல் அவள் தடவினள். அப்பெண் கொடியின் கௌரவத்தையும் மங்களத்தையும் அச்செடியல்லவா பெற்றது? அபாக்யனன எனக்கு அப்புண்யோதயம் என்று நேருமோ?

விதூ:—ஆஹா! இதுவும் ஓர் விந்தைதான். அசேதநமாகிய இம்மரங் களின்மீதும் பொருமை கொண்டுள்ளார் பகவான்.

பகவான்:—[மறுபடியும் ஆலோசித்து] இப்பொழுது நான் இவ்விடத் தில் எனது நாயகியினல் பார்க்கப்பட்ட வநத்தின் ஸௌந்தர்யத்தையே பார்க் கிறேன். அவள் எந்தக் குயில்களின் மதுரமாகிய கீதத்தைக் கேட்டு ஆநந்தி தாளோ அதையே நானும் கேட்கிறேன். அப்பெண்மணியானவள் எந்த மரத்தின் நிழலிலிருந்து இளைப்பாறினளோ, அம்மரத்தையே யானும் அடைந் திருக்கிறேன். ஆனல் நான் இப்போகங்களை அவளின்றித் தனிமையாய் அநு பவிக்கிறேன். இதுதான் வித்யாஸம்.

விதூ:—தேவா! ஒரு க்ஷணத்தில் அப்பெண்மணியுடன் சேர்ந்து ஸௌக்யத்தை அநுபவிக்கப்போகிறீர்கள். அதற்குள் ஏன் இவ்விதம் வருந்த வேண்டும்? சற்றுப் பொறுமையை வஹியுங்கள்.

பகவான்?—ஆஹா! அந்த நாளும் கிட்டுமோ? அவள் நிர்த்தோஷமான குணக்கூட்டங்களால் அலங்கரிக்கப்பட்டவள். ஆவாஹநம் செய்யப்பட்ட மதந மூல மந்த்ரத்தின் கலையே அவள் ஆநந்தத்திற்கெல்லாம் மூலம். இத்தகைய வநிதா ரத்நத்தை இப்பொழுது நான் பார்ப்பேனு? ஆநந்த மடைவேனு?

[திரைக்குள்]-தோழிகளே! போதும் போதும் உங்கள் கூச்சல்.

பகவான்:—[கேட்டுக் குதூஹலத்துடன்] இது என்ன அமுத மழை? மாலதீ மண்டபத்திற்கு வடக்குப் பாகத்தில் யாரோ பேசுகின்றனரே. [மறு படியும் யோசித்து] சரிதான்; சந்த்ரிகையிடத்தன்றி வேறு எங்கிருந்து குளுமையும் தெளிவும் அழகும் உண்டாகும்? ஆகையால் அப்பெண்மணிதான் இவ்வார்த்தைகளைப் பேசியிருக்க வேண்டும். ஆகையினுல் நாமும், அவள் ஸகி களுடன் கலந்து கூச்சமின்றிப் பேசும் பேச்சை மரத்தின் மறைவிலிருந்து கேட்டு ஆநந்திப்போம். [இருவரும் மரத்தடியில் ஒளிந்துகொள்கின்றனர்.]

[உடனே அரங்கத்தில் இரு ஸகிகளுடன் கூட வாஸந்திகா ஒரு கிளியைப் பின் தொடர்ந்து வருகிருள்.]

வாஸ:—ஸகிகளே! உங்களுடைய சப்தத்தினுல் இக்கிளியானது பறந்து வந்துவிட்டது. இவ்வழகிய கிளியை அந்யாயமாய் ஓட்டி விட்டீர்களே.

சதுரிகா:—சரிதான்; நீ என்ன செய்வாய் இப்பொழுது? கிளியை ஓட்டின பழியை எங்கள்மேல் சுமத்துகிருய். உன்னுடைய தண்டை சிலம்பு களின் மநோஹரமாகிய ஓசையைக் கேட்டு அது ஓடி வந்துவிட்டது. அபராதி கள் யார்? அவைகளா? நாங்களா? யோசித்துப் பார்.

பகவான்:—[கூர்ந்து கவனித்து] ஓஹோ! கிளி வேஷத்தைத் தரித்த மாயாமயனே இவன். அடாடா! இவனுடைய விலை மதிப்பற்ற அழகிய சரீரத்தைப் பார். பவழத் துண்டுகள் போன்ற சிவந்து நீண்டு கூர்மையாகிய மூக்கு; இந்த்ர நீலமணியைப் பழிக்கும் கண்களின் இரப்பைகள்; செம் மாணிக்கத்தை ஒக்கும் தேஹம்; மரகத மணியை நிகர்க்கும் இருகால்கள்; உருக்கி வார்த்த தங்கமயமாகிய இரக்கைகள்; அத்யத்புத கிளிவேடம்; மூவுலகத்தையும் மயக்கும் கிளி.

ப்ரமரிகா:—ஸகீ! கனவில் பகவானுல் வஞ்சிக்கப்பட்டாய்; பிறகும் 'இதோ இதோ கிளி பிடிபட்டது' என்று இவ்வளவு தூரம் அது உன்னை மோசம் செய்து இழுத்துக்கொண்டு வந்துவிட்டது. நீ அதைப் பின்தொடர்ந் தாய். மாயமான் வேடம் பூண்ட மாரீசன் ஸ்ரீ ராகவனை வஞ்சனை செய்து இழுத்து வந்ததுபோல், இக்கிளியும் உன்னை ஏதோ எண்ணத்தினுல் இவ்வநத் துக்கு அழைத்து வந்திருக்கிறது. அனைத்தும் கபடநாடக ஸூத்ரதாரி நடிக்கும் அத்புத நாடக மின்றி வேறில்லை.

விதூ.–தேவா ! மூவுலகங்களையும் வஞ்சனைக் குள்ளாக்கும் தாங்கள், அப்பெண்மணியின் கனவிலும் தோன்றி ஆசைகாட்டி மோசம் செய்தீர்களா? கண்ணனாய் அவதரித்தபோது புரிந்த கபடநாடகம் பாரெங்கிலும் புகழ் பெற்றது. இவ்வவதாரத்தில் இது ஒரு ரஸம் மிக்க நாடகம்.

பகவான்:–போதும் போதும் நிறுத்து. இல்லாத குற்றங்களை யெல்லாம் என்மேல் ஆரோபிக்கிறாய். சற்றுச் சப்தம் செய்யாமல் இரு; அவர்கள் ஸம்பாஷணையைக் கேட்டுக் களிப்போம்.

வாஸ:—தோழிமார்களே! மரத்தின்கீழ்ச் சென்றேன். ஸமீபக் கிளையிலிருந்து இக்கிளியைப் பிடித்தேன். அதன் இரக்கைகள் என் கைக்கு அகப்பட்டேவிட்டன. ஆகிலும் எவ்விதமோ சடுதியில் ஸாமர்த்யமாய் என் கையினின்று பறந்தோடி என்னை வஞ்சித்துவிட்டது. எவ்வளவு ஸௌந்தர்யம் ததும்பம் கிளி! எவ்விதமாகிலும் அதைப் பிடித்தே தீரவேண்டும். அதற்கு அஹோபிலேசன் திருநாமங்களைக் கற்றுக்கொடுத்தால் அது மிகவும் மநோஹரமாய்ப் பாடுமன்றோ?

பகவான்:—ஆஹா ! மாயாமயன் மிகவும் கெட்டிக்காரன். இப்பொழுது பூண்டிருக்கும் வேடத்திற்குத் தக்கவாறு விளையாட்டை அபிநயத்து அத்யந்தம் அவளை வஞ்சிக்கிறான். இதோ பார்! தன் அழகிய மூக்கினால் பழங்களைக் கொத்துகிறான். இரு இரக்கைகளையும் படபடவென்று உதறிக் கொள்கிறான். மயிர்க்கூச்ச லடைந்தவன்போல் சிறகுகளைப் பறக்க விரிக்கிறான். பூமியைத் தட்டுகிறான். சற்றுமேல் பறந்து கைக்கு எட்டுவதுபோல் ஸமீபத்தில் ஸஞ்சரிக்கிறான்.

சுகன்:—[சிறிய ஓர் அசோகச் செடியின் கிளையிலேறி, நான்கு பக்கமும் சுற்றிப் பார்த்து, ஸமீபத்திலிருக்கும் பகவானை கண்டான். பிறகு தனக்குள்] ஆஹா! பகவான் எவ்விதம் இவ்விடம் இவ்வளவு சீக்ரம் வந்தார்? ஸ்வாமியின் ப்ராண நாயகியாகிய இப்பெண்மணியை மிகவும் ஆயாஸமடையச் செய்துவிட்டேன். ஆகவே, இப்பொழுது அவள் கண்முன் நின்று ஆச்சர்யம் உண்டாகுமாறு ஒரு பாட்டுப் பாடுகிறேன்.

ப்ரமரிகா:–– [மிகவும் ஆச்சர்யமும் உத்ஸாஹமும் கொண்டு] ஸகி! இந்தக் கிளியைப் பார்த்தாயா? ஏதோ பாட்டுப் பாட ஆரம்பிப்பதுபோல ராக ஆலாபநம் செய்கிறது.

சுகன்:–– "தன்னை அண்டிப் பிழைப்பவர்களுக்கு வெள்ளியையும் பொன்னையும் ரத்நங்களையும் வாரி வழங்கும் வள்ளல். புருஷர்களுக்குள் ச்ரேஷ்டமானவன். அத்தகைய ப்ரபு ஒருவன் உன் மநோரதத்தை நிறைவேற்றக்கடவன். ஹிரண்யன் மார்பைக் கிழித்தவன்; சரணாகதனாகிய ப்ரஹ்லாதாழ்வானைக் காப்பாற்றிய உதாரன். வாக்கிற்கும் மனத்திற்கும் எட்டாத மஹிமையுடைய ப்ரபு. அத்தகைய நரஸிம்ஹன் உன் இஷ்டத்தை நிறைவேற்றக் கடவன்."

பகவான்:-- [தனக்குள்] அவள் மனோபாவத்தை அறிவதன்பொருட்டு இரு பொருள் தோன்றும்வண்ணம் ஸாமர்த்யமாய்ப் பாடியிருக்கிறுன் நல்லது; மேலே என்ன சொல்லுகிறுன் பார்ப்போம்.

வாஸ:-- இது என்ன ஆச்சர்யம்! 'சொன்னதைச் சொல்லுமாம் கிளிப்பிள்ளை' என்று யாராகிலும் பழக்கிவைத்த வார்த்தைகளையே சொல்வது கிளியின் ஜாதிதர்மம். இக்கிளியோவென்ருல் என்ன ஆச்சர்யம்! தாள ச்ருதி லயம் இவைகளைச் சேர்ந்து ஸங்கீதக் கலையில் தேர்ச்சி யடைந்தவர்களைப் போலல்லவோ பாடுகிறது?

சதுரிகா:-- தோழி! ஸங்கீத லக்ஷணங்கள் அறிந்த மேதாவி நீ. அதை ச்லாகிப்பது இருக்கட்டும்; உன் அன்பனைக் குறித்துக்காட்டும் பத ஜாலங்களின் அர்த்தத்தை விட்டுக் கீதத்தின் அருமையைப் பாராட்டுவது இப்பொழுது எதற்கு?

விதூ:-- தேவா! என்னுடைய வார்த்தையில் நம்பிக்கையின்றி யிருந்த தங்களுக்குச் சதுரிகாவின் வார்த்தையில்மட்டும் அவ்வளவு விச்வாஸமா? இருக்கட்டும். இதுவும் ஒரு காலம்.

பகவான்:-- கொஞ்சம் பொறு; இதற்குமேல் ஸந்தேஹ நிவர்த்தியின் பொருட்டுத் தெரிந்துகொள்ளவேண்டிய விஷயம் இன்னும் உள்ளது.

வாஸ:—தோழீ சதுரிகே! உன்னுடைய அறியாத்தன்மையை என்னிடத்தில் என் எறிடுகிருய்? இக்கிளியானது இருபொருள் தோன்றும்படி யாக அஹோபிலேச்வரனை அடையத் தக்க உபமானமாக வைத்து எவனே தன்னுடைய எஜமானனுடைய பெருமையைப் புகழ்ந்து கத்துகிறது.

சுகன்:—[தனக்குள்] ஆஹா! ஆச்சர்யம்! என்ன இவளுடைய பாண்டித்யம்! ஒரு தடவையிலேயே பொருளை க்ரஹித்தனளே! இவள் கவியினுடைய ஹ்ருதயத்தை நன்ருக அறிந்து பொருளின் கருத்தை எவ்வளவு சுருக்கமாகக் கூறினள்! ஆகவே இப்பொழுது அவளுக்கு என்னுடைய வருகையின் காரணத்தை அறிவிக்கிறேன். [வெளிப்படையாய்] பாக்யவதியே! உனக்கு மங்களம் உண்டாகட்டும்.

வாஸ:—[தனக்குள்] இக்கிளியானது ஆரம்பித்திருக்கும் பாட்டைப் பார்த்தால், கேள்வியும் பதிலுமாகும்படி அப்பாட்டை முடிக்கும் எண்ணம் போலும். முதலில் நானே அதன் வருகையின் காரணத்தைக் கேட்டு அறிகிறேன். [வெளிப்படையாய்] ஓ கிளியே! நீ யார்?

கிளி:—நான் அஹோபிலத்துக்குச் சந்த்ர[illegible]ன் வளர்த்த கிளி.

வாஸ:—[பஹுமானத்துடன்] நீ இவ்வுத்யானவநத்திற்கு வந்த காரணம் என்ன?

189247